ஆய ஜ.

திருவாவடுதுறையாதீன வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும்
ஆகிய
சேற்றூர்

**ரா. சுப்பிரமணியக்கவிராயரால்**

பரிசோதிக்கப்பெற்றன.


224683
தமிழ்மொழி
இலக்கணம்

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAR 1927
MADRAS



மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—௩.

மூன்றாம் பதிப்பு.

மதுரை:
தமிழ்ச்சங்கமுத்திராசாலை.
**1926.**



[Copy-right registered.]

22/1665



# இப்புத்தகத்தி லடங்கியவை.

3


க. முகவுரை.

உ. யாப்பிலக்கணவுதாரணச் செய்யுண்முதற்குறிப்பு.

ங. யாப்பிலக்கணம்.

ச. அணியிலக்கணம்.

ரு. அணிகளின் பெயர். (சூத்திரம்.)

சு. அணியகராதி.

எ. அணியும் உதாரணமுதற்குறிப்பும்.

அ. பிழைதிருத்தம்.


OFFICE OF THE REGISTRAR
21 MAR 1927
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

OFFICE OF THE REGISTRAR
21 MAR 1927
MADRAS

உலகத்திற் றமிழ்ப்பாஷையானது மிகப்பழைமையாயுமிலக்கண வரம்புடையதாயுமிருக்கின்றது. தமிழ்க்குரியவிலக்கணம் எழுத்துஞ் சொல்லும் பொருளும் யாப்பு மணியுமென வைந்துவகைப்படும். இவ் வைந்திலக்கணமுமுள்ளன தொல்காப்பியம் வீரசோழியம் இலக்கண விளக்கமுதலிய சில நூல்களே.

அந்நூல்களின் விரிவையுங் கற்றற்கருமையையு நோக்கித் திராவிட மகாபாஷியகர்த்தாவாகிய துறைசையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளின் முதன்மாணாக்கராகிய கச்சியப்பசுவாமிகளின் மாணாக்கர் திருத்தணிகைக் கந்தப்பையரவர்கட்குப் புத்திரராய்த் தோன்றிச் சென்னையிலிருந்து தமிழ்வித்திட்டு வளர்த்த விசாகப் பெருமாளையரவர்கள், தமிழிலக்கணமைந்தையுங் கற்போர்நெஞ்சங் காமுறுமாறு சுருக்கிவிளக்கி யினிய வசனரூபமாகவியற்றி "இலக்கணச் சுருக்கவினாவிடை" யென்று பெயரிட்டுச் சகாப்தம் ௧௭௫௦-ல் (அஃதாவது இற்றைக்கு 77-வருடங்கட்குமுன்) அச்சியற்றி வெளியிட்டார்கள்.

இவ்விலக்கணச் சுருக்கவினாவிடையில் யாப்பிலக்கணஞ் சிறுவர்க்கு வேண்டுமளவிற் சுருக்கித் தெளிவான இனிய வுதாரணச்செய்யுட்களுட னியற்றப் பெற்றிருத்தலால் அதனையும், அணியிலக்கணத்துள் தொல்காப்பியந் தண்டியலங்கார முதலியவற்றைப்போலன்றி வடநூற் சந்திராலோகமுறைப்படி நூறணியாக மொழிபெயர்த்துக் கற்கின்றவர்க்குங் கற்றவர்க்குங் கழிபேருவகைதருமா றழகிய வுதாரணச்செய்யுட்களுஞ் சேர்க்கப்பெற்றிருத்தலால் அதனையும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் வேசபண்டிதபரீக்ஷைக்குரிய பாடங்களாக நியமித்திருத்தலால், இவ் விரண்டனையுஞ் சேர்த்துக் கற்பவர்க்கு நற்றாயாய்க் கற்றவர்க்கு நற் றுணையாயவதரித்திருக்கின்ற மதுரைத் தமிழ்ச் சங்கத் ததிபதியாகிய பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந்—பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள் கட்டளையின்படி வெளியிடலானேன்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
8—11—'04.

இங்ஙனம்,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# யாப்பிலக்கணவுதாரணச்செய்யுண்முதற்குறிப்பு.

7

## சீர்கள்.

### ஓரசைச்சீர்.

மலர்மிசையேகி
கற்றதனாலாய

### ஈரசைச்சீர்.

வேதப்பொருளாய்

### மூவசைச்சீர்.

ஆநந்தக்கூத்த
மண்ணீரனல்

### நாலசைச்சீர்.

அள்ளற்பள்ளத்

### தளைகள்.

தேனார்கஞ்சச்
பெரியவாதந்நோய்

## தொடைகள்.

### எதுகைத்தொடை.

தகடீர்பெருஞ்
சொற்போர்புரிவ
வானின்றுலக
ஆவாவென்றே
தக்கார்தகவில

### மோனைத்தொடை.

கற்றுளகல்வியுங்
அடல்வேண்டுமைந்

### எதுகைமோனையின்றிவரும்பாட்டு.

பூத்தவேங்கைவி

---

## வெண்பா.

### குறள்வெண்பா.

உடையார்முன்னில்
கண்ணுதல்காட்சி

### நேரிசைவெண்பா.

கூற்றங்குமைத்தகு
எற்றான்புள்ளூர்ந்

### இன்னிசைவெண்பா.

தகடீர்பெருஞ்செ
கடற்குட்டம்போழ்
மழையின்றிமாநி
காதன்மகளிர்க
அங்கண்விசும்பி

### சிந்தியல்வெண்பா.

அறிந்தானையேத்தி
போற்றுமின்போற்று

### பஃறொடைவெண்பா.

வையகமெல்லாங்க

### குறள்வெண்செந்துறை.

ஆர்கலியுலகத்து

### குறட்டாழிசை.

நண்ணுவாரவினை
அறவர்க்கறவ
வண்டார்பூங்கோ

### வெண்டாழிசை.

நண்பிதென்றுதீய
அம்பேருண்கண்

### வெண்டுறை.

படர்தருவெவ்வினை
கூற்றிருக்குமடலா

### வெளிவிருத்தம்.

அங்கட்கமலத்தலர்
ஆவாவென்றேயஞ்

---

## ஆசிரியப்பா.

### நேரிசையாசிரியப்பா.

பெருந்துறைபுகுந்

### இணைக்குறளாசிரியப்பா.

நீரின்றண்மையுந்

### நிலைமண்டிலவாசிரியப்பா.

வேரல்வேலிவே

### அடிமறிமண்டிலவாசிரியப்பா.

தீர்த்தமென்பது

### ஆசிரியத்தாழிசை.

சத்தமுமாகியசசத
கன்றுகுணிலாச்

### ஆசிரியத்துறை.

கரைபொருகான்யா
இரங்குகுயின்முழ

### ஆசிரியவிருத்தம்.

விடஞ்சூழரவினிடை
கோமுனிவருக்கு
அருவருக்குமுலக
வளங்குலாவரு
கைத்தலத்தழற்க

---

### கலிப்பா.

**வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.**

தொல்லுலகம்படுசுடி

(அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா மேற்கூறிய கவியில் அராக மொழிந்த வைந்துறுப்பையுங் கொண்டுவரும்)

**நேரிசையொத்தாழிசைக்கலிப்பா.**

மேற்கூறியகவியில் அராகம் அம்போதரங்கமொழிந்தநான்குறுப்பையுங் கொண்டுவரும்

**வெண்கலிப்பா.**

சேல்செய்தமசர்வெ

**கலிவெண்பா.**

சுடர்த்தொடீஇ

**தரவுகொச்சகக்கலிப்பா.**

அஞ்சம்போனடை

**தரவிணைக்கொச்சகக்கலிப்பா.**

வடிவுடைநெடுமடி

**சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.**

பரூஉத்தடக்கைமத

(பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா இவ்விரண்டிற்குமுதாரணம் வந்துழிக் காண்க)

**கலித்தாழிசை.**

இருகூற்றுருவத்திருந்
பூண்டபறையறையப்
செல்லார்பொழிற்றில்லே

**கலித்துறை.**

யானுந்தோழியமாய

**கலிவிருத்தம்.**

வேய்தலேநீடிய

**கட்டளைக்கலிப்பா.**

சொல்லினீரிவரா

**கட்டளைக்கலித்துறை.**

சிலைமலிவாணுதலெ

---

### வஞ்சிப்பா.

**குறளடிவஞ்சிப்பா.**

பூந்தாமரைப்போத

**சிந்தடிவஞ்சிப்பா.**

எறிவெண்டிரைக்கட

**வஞ்சித்தாழிசை.**

பிணியென்றுபெயராமே

**வஞ்சித்துறை.**

போறிவன்றனை

**வஞ்சிவிருத்தம்.**

சாந்தனேனயதாழ்

---

### மருட்பா.

அரசியல்கோடா

---

### நூற்பா.

எழுத்தெனப்படுவ

**சூன்.**

உதுக்காண், சுரந்தானு

# யாப்பிலக்கணம்.

க. யாப்பென்பதியாது?

மேற்சொல்லிய பல சொற்களாலும் பொருட்கிடக்கைக் கற்றுவல்ல புலவரா லணிபெறப் பாடப்படுவதாம். யாப்பு, பாட்டு, தூக்கு, தொடர்பு, செய்யுள் என்பனவொருபொருட் சொற்கள்.

உ. அது எத்தனைவகைப்படும்?

பாவும் பாவினமுமென விருவகைப்படும்.

ங. இவ்விரண்டற்கு முறுப்பாய்வருவன யாவை?

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னு மாறு மவற்றிற் குறுப்பாம்.

ச. எழுத்துக்களென்பன யாவை?

மேலெழுத்திலக்கணத்திற்கூறிய முதல் சார் பென்னு மிருவகை யெழுத்துக்களுமாம். செய்யுளடிக் கெழுத்தெண்ணுங்கால் மெய்களெண்ணப்படாவாம். தளைசிதையவருமிடத்துக் குற்றியலிகரமுங் குற்றிய லுகரமும் அளபெடையுந் தள்ளுண்டுபோம்.

ரு. அசையென்பதியாது?

எழுத்துக்களாலாக்கப்பட்டுச் சீர்க்குறுப்பாய்வருவதாம்.

சு. அவ்வசை யெத்தனைவகைப்படும்?

நேரசையு நிரையசையுமென விருவகைப்படும்.

எ. நேரசைகளென்பன யாவை?

குறிலேனு நெடிலேனுந் தனித்துவரினும் அல்லது ஒற்றடுத்து வரினும் நேரசைகளாம். உதாரணம்—ஆ ழி என்னுமொழியில் நெடிலுங் குறிலுந் தனித்து நேரசையாயின. சொல் வான் என்னுமொழியிற் குறிலு நெடிலு மொற்றடுத்து நேரசையாயின. அ, அவன் என்பது போல விட்டிசைத்தவழியல்லது தனிக்குறின் மொழிக்கு முதலினேரசை யாகாது.

*

அ. நிரையசைகளென்பன யாவை ?

குறிலிணையேனுங் குறினெடிலேனுந் தனித்துவரினும் அல்லது ஒற்றடுத்துவரினும் நிரையசைகளாம். உ-ம்—அணி, அணில்; குரா, குரால் எனவரும்.

கூ. சீரென்பதியாது ?

அவ்வசை சிறுபான்மை தனித்தும் பெரும்பாலு மிரண்டுமுதலிய வாகத் தொடர்ந்தும் வருவதாம்.

க0. அச்சீ ரெத்தனைவகைப்படும் ?

ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் மூவசைச்சீரும் நாலசைச்சீரும் என நான்கு வகைப்படும்.

கக. ஓரசைச்சீர்களென்பன யாவை ?

தனித்துவரு நேரசையு நிரையசையுமாகிய விரண்டுமாம். இவற் றிற்குதாரண வாய்பாடு—நேர்-நாள்; நிரை-மலர். இவை பெரும்பாலும் வெண்பாவினீற்றிலுஞ் சிறுபான்மை யொழிந்தவற்றுள்ளும் வரும். உ-ம்.—

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாடொழாஅ ரெனின்."

இக்குறள்வெண்பாக்களி னிறுதியில், வார்-நாள் எனவும், ரெனின்-மலர் எனவும் ஓரசைச்சீரிரண்டும் வந்தன காண்க.

கஉ. ஈரசைச்சீர்களென்பன யாவை ?

நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என விரண்டசைகூடி வருதலாலாகிய சீர் நான்குமாம். இவற்றிற்குதாரண வாய்பாடு—நேர் நேர்-தேமா, நிரைநேர்-புளிமா, நிரைநிரை-கருவிளம், நேர்நிரை-கூவி ளம். இவை அகவற்கேயுரியவாய் இயற்சீரெனவும் அகவற்சீரெனவும் பெயர்பெறும்.

"வேதப் பொருளாய் விளங்கிய சங்கரன்
பாதத் துணைமனம் பற்றுவோர்
போதத் தொளிர்நலம் பொருந்திவாழ் குவரே."

இவ்வகவலுள், வேதப் - தேமா, பொருளாய்-புளிமா, விளங்கிய-கருவிளம், சங்கரன்-கூவிளம் என வீரசைச்சீர் நான்கும் வந்தன காண்க. பிறவுமன்ன.

௧௫. மூவகைச்சீர்களென்பன யாவை ?

மேற்சொல்லப்பட்ட நேர்நேர் முதலிய நான்கி னிறுதியினும் நேரசையு நிரையசையுந் தனித்தனி கூடிவருதலாகிய வெட்டுச்சீர்களுமாம். இவற்றிற் குதாரண வாய்பாடு—நேர்நேர்நேர் - தேமாங்காய், நிரைநேர்நேர் - புளிமாங்காய், நிரைநிரைநேர் - கருவிளங்காய், நேர்நிரைநேர்-கூவிளங்காய், நேர்நேர்நிரை-தேமாங்கனி, நிரைநேர் நிரை புளிமாங்கனி, நிரைநிரைநிரை-கருவிளங்கனி, நேர்நிரைநிரை-கூவிளங்கனி என வரும். இவ்வெட்டு மூச்சீரெனவும், இவற்றுட் காய்ச்சீர் நான்கும் வெண்பாவிற்குரியவாய் வெண்சீரெனவும், கனிச்சீர் நான்கும் வஞ்சிப்பாவிற்குரியவாய் வஞ்சிச்சீரெனவும் பெயர்பெறும். உ-ம்.—

"ஆனந்தக் கூத்த னடிக்கன்பு செய்மனனே
யீனந்தனை யொழிவா யின்று."

இக்குறள்வெண்பாவினுள் ஆனந்தக்-தேமாங்காய், கூத்த-தேமா, னடிக்கன்பு - புளிமாங்காய் செய்மனனே-கூவிளங்காய், யீனந் - தேமா, தனையொழிவாய்-கருவிளங்காய், இன்று-காசு எனக் காய்ச்சீர் நான்கும் வந்தன காண்க.

"மண்ணீரனல் வளிவானொடு
வெண்ணீர்மதி வெங்கதிருயி
ரெண்ணீருரு வியைபசுபதி
நாளும்
என்மன மிடங்கொண் டுறைதலால்
வன்மனக் கொடியர்சொற் கிலேயங் குதலே."

இவ்வஞ்சிப்பாவினுள் மண்ணீரனல்-தேமாங்கனி, வளிவானொடு-புளிமாங்கனி, வெண்ணீர்மதி-தேமாங்கனி, வெங்கதிருயி-கூவிளங்கனி, ரெண்ணீருரு-தேமாங்கனி, வியைபசுபதி-கருவிளங்கனி எனக் கனிச்சீர் நான்கும் வந்தனகாண்க.

கச. நாலசைச்சீர்களென்பன யாவை?

அம் மூவகைச் சீரெட்டனிறுதியிலும் நேரசையும் நிரையசையுந் தனித்தனியடுத்துவருதலாகியசீர் பதினாறுமாம். இவற்றிற்குதாரண வாயபாடு:—தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ, கருவிளந்தண்பூ, கூவிளந் தண்பூ, தேமாநறும்பூ, புளிமாநறும்பூ கருவிளநறும்பூ, கூவிளநறும்பூ, தேமாந்தண்ணிழல், புளிமாந்தண்ணிழல், கருவிளந்தண்ணிழல் கூவிளந் தண்ணிழல், தேமாநறுநிழல், புளிமாநறுநிழல், கருவிளநறுநிழல், கூவிள நறுநிழல். இவை வெண்பாவினுள் வருவனவல்ல; கலியினுள்ளும் அகவலுள்ளும் பெரும்பாலுங் குற்றியலுகரம் வந்தவிடத்தன்றிவாரா; வஞ்சிப்பாவினுட் பெரும்பாலும் வரவு மோரடியு ளிரண்டுநாலசைச்சீர் கண்ணுற்று நிற்கவும் பெறும். உ-ம்.—

"அள்ளற்பள்ளத் தகன்சோணுட்டு
வேங்கைவாயில்வியன்குன்றூரன்."

இவ்வஞ்சியடியி லிரண்டு நாலசைச்சீர் வந்தன காண்க.

கரு. தளையென்பதியாது?

நின்றசீரி னீற்றசையோடு வருஞ்சீரின் முதலசை யொன்றியேனு மொன்றாதேனுங் கூடிநிற்பதாம். நேர்முன்னேரும் நிரைமுன்னிரையும் வருத லொன்றிவருதலாம்; அவ்வாறன்றி, நேர்முன் நிரையும் நிரைமுன் நேரும்வருத லொன்றாதுவருதலாம்.

கசா. அத்தளை யெத்தனைவகைப்படும்,

நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர்வெண் டளை, இயற்சீர்வெண்டளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை, கலித்தளை, என வெழுவகைப்படும்.

கள. அவை யெவ்வாறு வருவன?

மாமுன் னேர்வருவது நேரொன்றாசிரியத்தளை; நாள்முன் னேர் வருவது மது. விளமுன் னிரைவருவது நிரையொன்றாசிரியத்தளை; மலர்முன் னிரைவருவது மது. காய்முன் னேர்வது வெண்சீர் வெண் டளை பூமுன் னேர்வருவது மது. மாமுன் னிரையும் விளமுன் னேரும் வருவன இயற்சீர்வெண்டளை; நாண்முன் னிரைவருவது மலர்

முன் னேர்வருவது மது. கனிமுன் னிரைவருவ தொன்றியவஞ்சித் தளை; நிழன்முன் னிரைவருவது மது. கனிமுன் னேர்வருவதொன்று வஞ்சித்தளை; நிழன்முன் னேர்வருவது மது. காய்முன் னிரைவருவது கலித்தளை; பூமுன் னிரைவருவது மது. உ-ம்.—

"தேனார் கஞ்சச் செம்ம லாதி
வானோர் மாதர் மங்கலங் களத்திடை
வலியொடு நிலைபெற மலிபெருங் கருணையி
னலைதரு மிருள்விட மணிமிடற் றிருத்துந்
தில்லையுட் சிவபிரான் றிருவடி
யொல்லையிற் பரசுநர்க் குயர்கதி யெளிதே."

இவ்வகவலுள்—தேனார் - கஞ் என மாமுன் னேர்வருதலா லிது நேரொன்றாசிரியத்தளையாம். மங்கலங். களத் என விளமுன் னிரை வருதலாலிது நிரையொன்றாசிரியத்தளையாம்.

"பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்."

இந்நேரிசைவெண்பாவினுள், பெரியவர்தந்–நோய் எனக் காய்முன் னேர்வருதலா லிது வெண்சீர்வெண்டளையாம். நோய்போற்–பிறர் என மாமுன் னிரைவருதலா லிது இயற்சீர் வெண்டளையாம். பிறவு மன்ன.

"மண்ணீரனல் வளிவானொடு, வெண்ணீர்மதி" என்னும் வஞ்சிப் பாவினுள், மண்ணீரனல் – வளி எனக் கனிமுன் னிரைவருதலா லிது ஒன்றியவஞ்சித்தளையாம். வளிவானொடு–வெண் எனக் கனிமுன்னேர் வருதலா லிது ஒன்றாவஞ்சித்தளையாம். பிறவு மன்ன.

"அஞ்சம்போ னடையுமையா ளகங்களிப்பச் சுரர்பரவ
நெஞ்சஞ்சேர் தருமன்பி னெறிமுனிவர் கரங்குவிப்ப
விஞ்சுஞ்சீர்த் தனித்தில்லை வியன்பொதுவி னடமாடுங்
கஞ்சந்தாழ் திருவடிகள் கருதிமட னொழிநெஞ்சே."

என்னு மிக் கொச்சகக்கலிப்பாவினுள், அஞ்சம்போ–னடை எனக் காய்முன் னிரைவருதலால் இது கலித்தளையாம். பிறவு மன்ன.

௧அ. அடியென்பதியாது ?

மேற்சொல்லப்பட்டதனைக ளொன்றும் பலவு மடுத்துவருவதாம்.

ககூ. அவ்வடி யெத்தனை வகைப்படும் ?

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி கழிநெடிலடி என வைந்து வகைப்படும்.

உ0. அவ்வடிகளைந்து மெவ்வாறுவருவனவாம் ?

இருசீரான்வருவது குறளடி; முச்சீரான்வருவது சிந்தடி; நாற்சீரான்வருவது அளவடி அல்லது நேரடி; ஐஞ்சீரான்வருவது நெடிலடி; ஐந்தின்மேற்பட்ட சீரான்வருவனவெல்லாங் கழிநெடிலடியாம். இவற்றிற் கிலக்கியம் பின் பாவு மினமுங்கூறும்வழிக் காண்க.

உக. தொடையென்பதியாது ?

பலவடிகளிலேனும் பலசீர்களிலேனு மெழுத்துக்க ளொன்றிவருவதாம்.

உஉ. அத்தொடை யெத்தனைவகைப்படும் ?

எதுகைத்தொடையு மோனைத்தொடையுமென விருவகைப்படும்.

உ௩. எதுகைத்தொடையென்பதியாது ?

அடிதோறு முதலெழுத்தளவொத்துநிற்ப இரண்டாமெழுத்தொன்றிவருவ தெதுகைத்தொடையாம். உ-ம்—

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்."

இவ் வின்னிசைவெண்பாவினு ளிரண்டாமெழுத் தொன்றிவருதல் காண்க. அன்றியும்,

"சொற்போர் புரிவர் நான்மறையா றங்க முணர்ந்த தொழுகுலத்தோர்
விற்போர் புரிவர் நெடியசிலை யிராம னனைய விறல்வேந்தர்
பொற்போர் புரிவர் பிறர்பொருளுந் தமபோற் பேணிப் புரிவணிகர்
நெற்போர் புரிவ ரங்கரில் வேளாண் குலத்து நெறியினரே."

என மூன்றாமெழுத்து முதலியன வொத்துவருதலுங் கொள்க.

ஒரோவிடத் தோரடியுள்ளுஞ் சீர்களி னிரண்டாமெழுத் தோன்றிப் 'பொன்னி-னன்ன பொறிசுணங் கேந்தி'-என வருதலு முண்டு. சிறுபான்மை வருக்கவெழுத்தும் நெட்டெழுத்தும் இனவெழுத்தும் பிறவும் எதுகையாக வரப்பெறும். உ-ம்.—

"வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று."

இது வருக்கவெதுகை.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்."

இது நெடிலெதுகை.

"தக்கார் தகவில ரென்ப தவரவ, ரெச்சத்தாற் காணப்படும்" இது வல்லினவெதுகை. இவ்வாறு மெல்லினவெதுகையும், இடையினவெதுகையும் வருவனகொள்க.

உ௩. மோனைத்தொடையென்பதியாது ?

முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வருஞ்சீர்களி லொன்றனுள்ளேனும் பலவற்றினுள்ளேனு முதலெழுத் தோன்றிவருவது மோனைத்தொடையாம். உ-ம்.—

"கற்றுள கல்வியுந் திருவு மாற்றலுந்
தற்றெறு மறலியைத் தடுப்ப வல்லவா
முற்றெருங் குணர்பசு பதியை முன்னுறு
துற்றநா வொழித்திடு முணர்வி லிக்கரோ."

இச்செய்யுளில் முதலடியிற் ககரமும், இரண்டாமடியில் தகரமும், மூன்றாமடியில் முகரமும், நான்காமடியில் உகரமும் மோனையாகவந்தன.

அன்றியும், அ—ஆ—ஐ—ஔ என்னு மிந்நான்கு மொன்றற்கொன்று மோனையாம். இ—ஈ—எ—ஏ என்னு மிந்நான்கு மொன்றற்கொன்று மோனையாம். உ—ஊ—ஒ—ஓ என்னு மிந்நான்கு மொன்றற்கொன்று மோனையாம். ஞ—நவும், ச—தவும், ம—வவும் ஒன்றற்கொன்று மோனையாம். உ-ம்.—

"அடல்வேண்டு மைந்தின் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு."

இதன் முதலடியில் அகாத்திற்கு ஐகாரம் மோனையாயிற்று. மோனை—அனு என்பன வொருபொருட்சொற்கள். பிறவுமன்ன.

உரு. எதுகைமோனையின்றிவரும் பாட்டுகளுமுளவோ ?

அவ்வாறுவரும் பாட்டுகளுஞ் சில்வுளவாம். உ-ம்.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சிமனத்தகத் தோனே."

எனவரும்.

உசு. பாவென்பதியாது ?

இரண்டுமுதலியவடிகளாலாக்கப்பட்டு வெண்பாமுதலியபெயர்பெற்றுவருவதாம்.

உஎ. அப்பாவான தெத்தனைவகைப்படும் ?

வெண்பாவும், அகவற்பாவும், கலிப்பாவும், வஞ்சிப்பாவும் ஆகிய நான்கனோடு, மருட்பா, நூற்பாவென்னுமிரண்டுங்கூடி யறுவகைப்படும். இவற்றுள் முன்னான்குமே சிறப்புடையவாம்.

உஅ. அந்நான்குபாவிற்கும்வரு மினங்களியாவை ?

தாழிசை, துறை, விருத்தமென ஒவ்வொன்றற்கு மும்மூன்றும்.

உகூ. வெண்பாவிற் கிலக்கணமென்னை ?

ஈற்றடி முச்சீரடியாகவும் ஏனையடி நாற்சீரடியாகவும் பெற்றுக் காய்ச்சீருமகவற்சீரும் வெண்சீர்வெண்டளையு மியற்சீர்வெண்டளையுங் கொண்டு மற்றைச்சீருந் தளையும் பெறாது, காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாட்டான் முடிவது பொதுவிலக்கணமாம்,

௩0 அவ்வெண்பா வெத்தனைவகைப்படும் ?

குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடைவெண்பா என வைந்துவகைப்படும்.

௩க. குறள்வெண்பா வெவ்வாறு வரும் ?

இரண்டடியாய் ஒருவிகற்பத்தாலேனும் இருவிகற்பத்தாலேனும் வரும். உ-ம்.—

"உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்."

இது ஒருவிகற்பக் குறள்வெண்பா ; மலரெனமுடிந்தது.

"கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் றேற்றங் கொளல்."

இது இருவிகற்பக் குறள்வெண்ப.

௩௨. நேரிசைவெண்பாவெவ்வாறு வரும் ?

நான்கடியா யிரண்டாமடியிறுதிச் சீர்தனிச் சொல்லாய்வர அடிமுழுது மோரெதுகையாகவேனும், முன்னிரண்டு மோரெதுகையும் பின்னிரண்டும் மற்றோரெதுகையுமாகவேனும் வரும். உ-ம்.—

"கூற்றங் குமைத்த குரைகழற்காற் கும்பிட்டுத்
தோற்றந் துடைத்தேந் துடைத்தேமாற்—சீற்றஞ்செய்
யேற்றினன் றில்லை யிடத்தினு னேன்னினியாம்
போற்றினு னல்கும் பொருள்."

இது ஒருவிகற்ப நேரிசை வெண்பா.

"எற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தா
னீற்றா னிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபான்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீண்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு."

இது இருவிகற்ப நேரிசை வெண்பா.

௩௩. இன்னிசைவெண்பா ஒருவிகற்பத்தாலேனும் பலவிகற்பத்தாலேனு நான்கடியாய்த் தனிச்சொல்லின்றிவரும்.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற்றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்."

இது தனிச்சொல்லின்றி யொருவிகற்பத்தான்வந்த வின்னிசை வெண்பா.

"கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்."

இது தனிச்சொல்லின்றிப் பலவிகற்பத்தான்வந்த இன்னிசை வெண்பா. அன்றியும்,

"மழையின்றி மாநிலத்தார் கில்லை-மழையுந்
தவமிலா ரில்வழி யில்லைத்—தவமு
மரசிய லில்வழி யில்லை-யரசனு
மில்வாழ்வா ரில்வழி யில்."

எனவடிதோறுந் தனிச்சொற்பெற்றுவருவதும்.

"காதன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றார் நெஞ்சும் பிழைத்தகன்றார் நன்னெஞ்சும்
போதம் படரும் புலியூரே-தாதுண்டு
வண்டுறங்கு பூஞ்சடையோன் வைப்பு."

என மூன்றாமடியி னிறுதிதனிச்சொற்பெற்றுவருவதும்.

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்."

என விரண்டாமடியிறுதி தனிச்சொற்பெற்று மூன்றுவிகற்பத் தான்வருவதும், பிறவாறு நேரிசைவெண்பாவிற் சிறிதுவேறுபட்டு வருவனவு மின்னிசைவெண்பாவாம்.

௩௪. சிந்தியல்வெண்பாவெவ்வாறுவரும் ?

மூன்றடியாய் நேரிசைவெண்பாவைப்போல வருவது நேரிசைச் சிந்தியல்வெண்பாவென்றும், இன்னிசைவெண்பாவைப்போல வருவது இன்னிசைச்சிந்தியல்வெண்பாவென்றும் பெயர்பெற்றுவரும், உ-ம்.—

"அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செவ்வ னுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு."

இது நேரிசைச்சிந்தியல்வெண்பா,

19

"போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்கா
ளேற்றுகந்தான் பொற்று ளிணை."

இது இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

௩ரு. பஃறொடைவெண்பா வெவ்வாறுவரும் ?

நான்கடியின்மிக்க பலவடிகளைப்பெற்றுவரும். உ-ம்.—

"வையகமெலாங் கழனியா வையகத்துட்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்துள்
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டிற் றலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புரமெலாங் கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
யானேற்றான் கச்சி யகம்."

இது ஏழடிப் பலவிகற்பப் பஃறொடைவெண்பா.

௩சு. குறள்வெண்பாவிற்கினம்யாவை ?

குறள்வெண்செந்துறையுங் குறட்டாழிசையு மினவாம்.

௩எ. குறள்வெண்செந்துறை யெவ்வாறுவரும் ?

விழுமியபொருளு மொழுகியவோசையு முடையதாகி யெனைத்துச் சீரானு மளவொத்தவிரண்டடியாய் வரும். உ-ம்.—

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை."

௩அ. குறட்டாழிசை யெவ்வாறுவரும் ?

நாற்சீரின்மிக்க பலசீரான் வருமடியிரண்டா யீற்றடி குறைந்து வருவனவும், விழுமியபொருளு மொழுகியவோசையுமின்றிக் குறள் வெண்செந்துறையிற் சிதைந்துவருவனவும், வேற்றுத்தளை விரவியகுறள் வெண்பாவுமென மூன்றுவகைப்பட்டுவரும். உ-ம்.—

"நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணினை யடியே யடைவார்கள் கற்றவரே-எம்."

"அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல வையிரே-எம்."
"வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி-எம் வரும்."

௩௯. வெண்பாவின மூன்றனுள் வெண்டாழிசை யெவ்வாறுவரும்?

மூன்றடியாய் முதலிரண்டடியுநாற்சீராயும், ஈற்றடியொன்றும்வெண்பாவைப்போல முச்சீராயு முடிவுபெற்று வேற்றுத்தளைவிரவி வருவனவும், சிந்தியல்வெண்பா வொருபொருள்மேல் மூன்றடுக்கி வருவனவுமென விருவகைப்பட்டுவரும். உ-ம்.—

"நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யா
ரன்பு வேண்டு பவர்."

இது மூன்றடியால்வந்த வெண்டாழிசை.

"அம்பெருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல்."
"வாணெருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்."
"கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
யாளாக வாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்."

இது சிந்தியல்வெண்பா வொருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த வெள்ளைத்தாழிசை.

௪0. வெண்டுறை யெவ்வாறுவரும்?

மூன்றடிமுதலேழடியீறாகப் பின்புநின்ற சிலவடிகளிற் சிலசீர் குறைந்துவரும்; அவற்று ளெல்லாவடியு மோரோசையாய் வருவன வன்றியு முன்பிற்சிலவடிகளோரோசையாயும் பின்பிற்சிலவடிகள் மற்றோரோசையாயும் வருதலுமுண்டு. உ-ம்.—

"படர்தருவெவ் வினைத்தொடர்பாற் பவத்தொடர்பப் பவத்தொடர்பாற் படரா நிற்கும், விடலரும்வெவ் வினைத்தொடர்பவ் வினைத்தொடர்புக் கழிவுண்டோ வினையேற் கம்மா, விடர்பெரிது முடையேன்மற் றென்செய்கே னென்செய்கே, னடலரவ மரைக்கசைத்த வடிகேளோ வடிகேளோ."

இது நான்கடியாய்ப் பின்னிரண்டு மிருசீர்குறைந்துவந்த வேற்றொலிவெண்டுறை.

"கூற்றிருக்கு மடலாழிக் குரிசின்முத லோரிறைஞ்சக் கொழுந்தேன் பில்கி, யூற்றிருக்குந் தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத் தொருதா ளூன்றி, வண்டுபா டச்சுடர் மகுடமா டப்பிறைத், துண்டமா டப்புலித் தோலுமா டப்பகி, ரண்டமா டக்குலைந் தகிலமா டக்கருங், கொண்டலோ டுங்குழற்கோதை யோ டுங்கறைக், கண்டனா டுந்திறங் காண்மினோ காண்மினோ."

இது எழடி வேற்றொலிவெண்டுறை.

சக. வெளிவிருத்தமெவ்வாறுவரும்?

மூன்றடியினாலேனு நான்கடியினாலேனு முற்றுப்பெற்று, அடிதோறு மிறுதியி லொருசொல்லையே தனிச்சொல்லாகக் கொண்டுவரும். உ-ம்.—

"அங்கட் கமலத் தலர்கமல மேயிரு-நீரேபோலும்
வெங்கட் சுடிகை விடவரவின் மேயிரு-நீரேபோலுந்
திங்கட் சடையீருந் தில்லைவனத் துள்ளீரு-நீரேபோலும்."

இது மூன்றடியாகவந்த வெளிவிருத்தம்.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா-ரொருசாரார்
கூகூவென்றே கூவிளி கொண்டா-ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா-ரொருசாரா
ரேகீர் நாகீ ரென்செய்து மென்றா-ரொருசாரார்."

இது நான்கடியால்வந்த வெளிவிருத்தம்.

சஉ. அகவற்பாவினிலக்கணமியாது?

நாற்சீரான்வரு மளவடியதாகியு மியற்சீர்பயின்றும் அயற்சீர்விரவியுந் தன்றளைதழுவியும் பிறதளைமயங்கியுங் கருவிளங்கனி கூவிளங்கனி யென்னு மிருசீருங்கலவாது மூன்றுமுதலிய பலவடிகளால் வருவதகவற்பாவனைத்திற்கும் பொதுவிலக்கணமாம்.

சங. அவ்வகற்பா வெத்தனைவகைப்படும்?

நேரிசையாசிரியப்பாவும், இணைக்குறளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறிமண்டிலவாசிரியப்பாவுமென நான்குவகைப்படும். அகவல், ஆசிரியம் ஒருபொருட்சொற்கள்.

௪௪. அந்நான்கனுள் நேரிசையாசிரியப்பா வெவ்வாறுவரும் ?

ஈற்றயலடி முச்சீரடியும், மற்றையடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாகப் பெற்றுவரும். உ-ம்.—

"பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே."

எனவரும்.

௪௫. இணைக்குறளாசிரியப்பா வெவ்வாறுவரும் ?

ஈற்றடியு முதலடியுமொத்து நடுவடிகளி லொன்றும் பலவு மொரு சீரும் பலசீருங் குறைந்துவரும். உ-ம்.—

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார லுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து,
தீரத் தீரத் தீர்பொரல் லாதே."

எனவரும்.

௪௬. நிலைமண்டிலவாசிரியப்பா வெவ்வாறுவரும் ?

எல்லாவடியு மளவொத்த நாற்சீரடிகளாகப் பெற்றுவரும். உ-ம்.—

"வேரல் வேலி வேர்க்கோட் பல்வின்
சார லுட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ
ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."

எனவரும்.

௪௭. அடிமறிமண்டிலவாசிரியப்பா வெவ்வாறு வரும் !

எல்லாவடியு மளவொத்து எவ்வடியை முதனடுவிறுதியாக வுச்சரித்தாலு மோசையு பொருளும் வழுவாது நிற்பக்கொண்டுவரும். உ-ம்.—

"தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே."

எனவரும்.

சஅ. அகவற்பாவின மூன்றனுள், ஆசிரியத்தாழிசை யெவ்வாறு வரும் ?

எனைத்துச்சீரானுந் தம்மு ளளவொத்த மூன்றடியதாய்த் தனித்தேனும் ஒருபொருண்மேன் மூன்றடுக்கியேனும் வரும். உ-ம்.—

"சத்தமு மாகியச் சத்தத் தாற்பெறு
மத்தமு மாகலி னனந்தன் கண்களே
யுத்தம னைந்தெழுத் துருவங் காண்பன."

இது தனித்துவந்த ஆசிரியத்தாழிசை.

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவ
னின்று நம்மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

"பாம்பு கயிறுக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ."

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

இது ஒரு பொருண்மேன் மூன்றடுக்கிவந்த ஆசிரியத்தாழிசை.

சகூ. ஆசிரியத்துறை யெவ்வாறுவரும் ?

எனைத்துச்சீரானும் வருமடிநான்குடையதா யீற்றயலடி குறைந்தேனும், முதலடியு மூன்றுமடியுங் குறைந்தேனும் வரும் அவ்வாறு வருமிடத்து இடைமடங்கியு மடங்காதும் வரும். உ-ம்.—

"கரைபொரு கானியாற்றங் கல்லதரெம் முள்ளி வருவிராயி
னரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சுநும்மை,
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ."

இது நான்கடியா யீற்றயலடி குறைந்துவந்த வாசிரியத்துறை.

"இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனு
வரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனி
லரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றோர் நெஞ்சமென் செய்த திளவேனில்."

இது நான்கடியதாயிடைநுறைந் திடைமடக்காய்வந்த ஆசிரியத் துறை. பிறவுமன்ன.

௫0. ஆசிரியவிருத்த மெவ்வாறுவரும் ?

அளவொத்த கழிநெடிலடி நான்கினுல்வரும். உ-ம்.—

"விடஞ்சூ ழரவி னிடைநுடங்க மினல்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்கண் ணீல மலர்தாந்தாந்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்கைத் தண்ணுமையே."

இது அறுசீர்க் கழிநெடியாலவந்த ஆசிரியவிருத்தம்.

"கோமுனிவ ருக்குமரி தாய்முதும றைப்பனுவல் கூறியப ரப்பி ரமமா,
மோமெனுமெ ழுத்தின்வடி வாய்நடந விற்றுபுலி யூரன்மகு டச்ச டிலமேன்
மாமதியி னைத்தனது கோடெனவெ டுப்பமத மாமுகன்மு கக்கை தொடவத்
தூமதிப ணிப்பகையெ னுவரந திப்புகவோர் தோணியென விட்ட கலுமே."

இது எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

"அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
மருவருக்கன் மதிவளிவான் யமானன் றீநீர்
மண்ணெனுமெண் வகையுருப்பின் வடிவு கொண்ட
வொருவனுக்கு மொருத்திக்கு முருவொன் றுலவ்
வுருவையிஃ தொருத்தனென் கோவொருத்தி யென்கோ
விருவருக்கு முரித்தாக வொருவ ரென்றோ
ரியற்சொலில தெனின்யான்மற் றென்சொல் கேனே."

இது எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

"வளங்கு லாவரு மணங்க ளூர்விழி மயக்கி லேமுலை
முயக்கி லேவிழு மாந்தர்காள்
களங்கு லாமுட லிறந்து போயிடு காடு சேர்முனம்
வீடு சேர்வகை கேண்மினோ
துளங்கு நீள்கழ றழங்க வாடல்செய் சோதி யானணி
பூதி யானுமை பாதியான்
விளங்கு சேவடி யுளங்கொ ளீர்யமன் விடுத்த பாசமு
மடுத்த பாசமும் விலக்குமே."

இது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்,

"கைத்த லத்த ழற்க ணிச்சி வைத்தி டப்பு றத்தொ ருத்தி
கட்க டைப்ப டைக்கி ளைத்த திறலோரா
முத்த லைப்ப டைக்க ரத்தெ மத்தர் சிற்ச பைக்கு ளிற்கு
மூக்க ணக்க ருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்தி லத்தி னைப்ப தித்த கச்ச றுத்த டிக்க னத்து
நிற்கு மற்பு தத்த னத்தி னிடையேவே
எத்தி ரத்தி னைத்தொ டுத்து விட்டு கெட்டபிற்க ணித்தி
லக்க ணுற்றி டச்செய் விக்கு மததானே."

இது ஒன்பதின்மிக்கசீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

௫௧. கலிப்பாவிற் கிலக்கணமென்னை ?

வெண்சீர்மிகப்பெற்று மாச்சீரும் விளங்கனிச்சீரும் பெறாது, பிற சீர்களுஞ் சிறுபான்மை கலந்து கலித்தளையு மயற்றளையுந் தழுவித் தரவு தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னு மாறுறுப்பினு ளேற்பனகொண்டு நாற்சீரடியால்வருவது கலிப்பாவனைத் திற்கும் பொதுவிலக்கணமாம்.

௫௨. அக்கலிப்பா வெத்தனைவகைப்படும் ?

ஒத்தாழிசைக்கலிப்பாவும், வெண்கலிப்பாவும், கொச்சகக்கலிப் பாவுமென மூன்று வகைப்படும்.

௫௩. ஒத்தாழிசைக்கலிப்பா வெத்தனைவகைப்படும் ; அவை யெவ் வாறு வரும் ?

வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா, அம்போதரங்க வொத்தாழி சைச்கலிப்பா, நேரிசையொத்தாழிசைக்கலிப்பா என மூன்றுவகைப் படும். அவற்றுள் வண்ணகவொததாழிசைக்கலிப்பா—ஒருதரவு, மூன்று தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னு மிவ்வாறுறுப்பு மொன்றன்பின்னொன்றுறக் கொண்டுவரும். அராகமெனி னும் வண்ணகமெனினுமொக்கும். அசையடியெனினும் அம்போதரங்க மெனினு மொக்கும். அராகவுறுப்பானது அளவடிமுதல லெல்லாவடி களானு நான்கடிமுதல லெட்டடியளவாகவரும். அம்போதரங்க வுறுப் பானது நாற்சீரடியாகிய ஈரடியா லிரண்டும், ஓரடியா லொன்கும், முச்சீ ரடியா லெட்டும், இருசீரடியாற் பதினாறுமாக வரும் ; சிறுபான்மை முச் சீரடிநான்கும் இருசீரடியெட்டுமாகவும் வரும். உ-ம்.—

"தொல்லுலகம் படுசுடிகைச் சுடர்மணி விளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடுபுலியும் பணிசெய்ய
வந்தரதுந் துமிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
விந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத் தளிர்செங்கைத் துணைவிதுணைக் கண்பனிப்ப
வாடகத் திருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்."

இது தரவு.

"மூன்மலையுங் கொலைமடங்க வீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே."

"கடநாக மெட்டும்விடங் காலுக மோரெட்டுந்
தடநாக மவையெட்டுந் தரித்துளபூந் துகிலொன்று
முடலுக வடல்புரியுங் கொடுவரியி னுடுப்பொன்று
மடலுக வரவல்குற் கணிகலையா வசைத்தனையே."

"வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையு
மருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையுங்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனுந்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே."

இவைமூன்றுந் தாழிசை.

"கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றுடுமிடல் பெறுபக டொடுமட
லெறூழ்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை."

"இலவிதழ் மதிநுத லிரதியொ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
வலைகட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னலையடல் செயுநுதல் விழியினை."

"உலகமொ டுயிர்களு முலைதர வலம்வரு
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய

புலவரு மடிகளோர் புகலென முறையிட
வலைகடல் விடமுன மமுதுசெய் தருளினை."

"விசையிலெம் மிறைவியும் வெருவர விரசித
வசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை."

இவை நான்கும் அராகம்.

"அருவமு முருவமு மாகி நின்றுமவ்
வருவமு முருவமு மகன்று நின்றனை."

"சொல்லொடு பொருளுமாய்த் தோன்றி நின்றுமச்
சொல்லையும் பொருளையுந் துறந்து நின்றனை."

இவை நாற்சீரடியிரண்டம்போதரங்கம்.

"அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை."
"பொன்னலம் விழைந்தவர் பொருளுமாயினை."
"யின்னலம் விழைந்தவர்க் கின்ப மாயினை."
"மெய்ந்நலம் விழைந்தவர் வீடு மாயினை."

இவை நாற்சீரோரடியால்வந்த நான்கம்போதரங்கம்.

"முத்தொழிலின் வினைமுத னீ
மூவர்க்கு முழுமுத னீ
யெத்தொழிலு மிறந்தோய் நீ
யிறவாத தொழிலினை நீ
யிருவிசும்பின் மேயோய் நீ
யெழின்மலரின் மிசையோய் நீ
யரவணையிற் றுயின்றோய் நீ
யாலின்கீ ழமர்ந்தோய் நீ."

இவை முச்சீரோரடி யெட்டம்போதரங்கம்.

"பெரியை நீ, சிறியை நீ, பெண்ணு நீ, யாணு நீ
யரியை நீ, யெளியை நீ, யறமு நீ, மறமு நீ
விண்ணு நீ, மண்ணு நீ, வித்து நீ, விளைவு நீ
பண்ணு நீ, பயனு நீ, பகையு நீ, யுறவு நீ."

இவை யிருசீரோரடிப் பதினாறம்போதரங்கம்.

"எனவாங்கு" இது தனிச்சொல்.

"கற்பனை கடந்தநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமுங்
கீழ்மே றுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே."

இது சுரிதகம். இவ் வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவினுள் தரவு முதலிய வாறுறுப்புங் குறைவின்றி வந்தன.

அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா, மேற்சொல்லப்பட்ட தரவு முதலிய வாறனுள் அராகமொழிந்த வைந்துறுப்பையுங்கொண்டு வரும். இதற்குதாரண மேற்காட்டிய வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராகமொழிந்ததுக்காண்க.

நேரிசையொத்தாழிசைக்கலிப்பா தாவுமுதலிய வாறனுள் அராகம் அம்போதரங்கமொழிந்த நான்குறுப்பையுங் கொண்டுவரும். இதற்குதாரணம், அவ்வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவினுள் அராகத்தையும் அம்போதரங்கத்தையு மொழித்துங் காண்க.

௫௪. வெண்கலிப்பா வெத்தனைவகைப்படும்? எவ்வாறுவரும்?

வெண்கலிப்பாவும் கலிவெண்பாவுமென விருவகைப்படும். அவற்றுள், வெண்கலிப்பா கலித்தளைவிரவி யீற்றடிமுச்சீரான் முடியும். உ-ம்.—

"செல்செய்த மதர்வேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யுந்
தருணவிளம் பிறைக்கண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கசிந்துருகா நிற்குமா
லெவ்வண்ண மாறிநிற்ற லகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று."

இது வெண்கலிப்பா.

கலிவெண்பா வெண்டளைதழுவி யீற்றடி முச்சீரான் முடியும். உ-ம்.

"சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்யா மாடு
மணற்சிற்றிற் காலிற் சிதையா வடர்ச்சியபொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா வில்லுளே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தாத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்."

இது கலிவெண்பா.

ருரு. கொச்சகக்கலிப்பா வெத்தனைவகைப்படும்?. எவ்வாறுவரும்?

தரவுகொச்சகக்கலிப்பா தரவிணைக்கொச்சகக்கலிப்பா, சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என வைந்துவகைப்படும். அவற்றுள், தரவுகொச்சகக்கலிப்பா தரவு ஒன்று வருவதாம். உ-ம். அஞ்சம்போனடை............ நெஞ்சே. இது தரவுகொச்சகக்கலிப்பா. இது இவ்வாறு தனித்துவருத லன்றித் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்றுவருதலு முண்டு.

தரவிணைக்கொச்சகக்கலிப்பா இரண்டு தரவைக்கொண்டுவருவதாம். உ-ம். —

"வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாங்
கொடிபடு நெடுமாடக் கூடலார் கோமானே."

தரவு; 'எனவாங்கு'–தனிச்சொல் ;

"துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோ மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே."

தரவு ; 'அதனால்'–தனிச்சொல் ;

"செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே."

இது, இடையிடையே தனிச்சொற்பெற் றாசிரியச்சுரிதகத்தான் முடிந்தது.

சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா சிலதாழிசைகளோடு பிறவுறுப்புக் களையுங் கொண்டுவரும். உ-ம் —

"பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே." தரவு;

"ஆங்கொருசார்
உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே."

"ஆங்கொருசார்
அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே."

"ஆங்கொருசார்
மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியனாப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே."

இவை மூன்றுந்தா ழிசை; 'அஃதான்று'—தனிச்சொல்;

"கொடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமா
னின்புக ழொருவன் செம்பூட் சேஎ
யென்றுநனி யறிந்தனர் பலரே தானு
மைவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே."

சுரிதகம். இது தனிச்சொல்லிடையிடைபெற் றொருதரவுமூன்று தாழிசையுஞ் சுரிதகமுங்கொண்டு நேரிசையொத்தாழிசைக்கலியிற் சிறிது வேறுபட்டுவந்தது.

பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா பலதாழிசைகளோடு மற்றவுறுப்புக்களையுங் கொண்டுவரும். மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும் பலவாறு மயங்கி வரும். இவ்விரண்டிற்கு முதாரணம் வந்துழிக்காண்க.

ருசு. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவிற் குறுப்பாகவருந் தரவுதாழிசைகளுக்கு அடிவரையறையாமா றென்னை ?

வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாக்களுக்குத் தரவு ஆறடியால் வரும்; மற்றைக் கலிப்பாக்களுக்குத் தரவு மூன்றடிமுதலிய பலவடிகளால் வரும். தாழிசையொன்றற் கடி யிரண்டேனு மூன்றேனு நான்கேனும் வரும்.

ருஎ. கலிப்பாவின மூன்றனுட் கலித்தாழிசை யெவ்வாறுவரும்?

இரண்டுமுதலிய பலவடிகளா யீற்றடிமிக்கு ஏனையடி தம்மு ளளவொத்து நிற்பத் தனித்தேனு மொருபொருண்மேன் மூன்றடுக்கியேனும் வரும். உ-ம்.—

“இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
யொருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
யொருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே.”

இது ஈற்றடிமிகுந்து தனித்துவந்த நான்கடிக்கலித்தாழிசை.

“பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே.”

எனச் சிறுபான்மை ஏனையடிகளொவ்வாது வருதலு முண்டு.

“செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.”

“முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னனை
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.”

"ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனப்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்."

இது ஒருபொருண்மேன் மூன்றடுக்கி யீற்றடிமிக்குவந்த கலித்தாழிசை.

ருஅ. கலித்துறை யெவ்வாறுவரும்?

ஐஞ்சீரடி நான்கினைக்கொண்டுவரும். உ-ம்.—

"யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
றேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே."

ருக. கலிவிருத்த மெவ்வாறு வரும்?

நாற்சீரடி நான்கினைக்கொண்டுவரும். உ-ம்.—

"வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலி
னாய்தலி னெண்சுட ராழியி னன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
னீதலை சென்றுரை நீள்கடை காப்போய்."

எனவரும்.

சுO. மேற்சொல்லப்பட்ட கலிப்பாவினுங் கலித்துறையினும் வேறுபட்டுவருங் கலிப்பாவுங் கலித்துறையுமுளவோ?

உளவாம்; அவை, கட்டளைக்கலிப்பாவுங் கட்டளைக்கலித்துறையுமெனப் பெயர்பெறும். அவற்றுள், கட்டளைக்கலிப்பா-முதற்கண் மாச்சீர் பெற்று நாற்சீரான்வருவ தரையடியாகவும், அஃதிரட்டிகொண்டதோரடியாகவும் பெற்று, அவ்வடி நான்குகொண்டு வரும். அரையடிக்கெழுத்து முதலசை நேராயிற் பதினொன்றும், நிரையாயிற் பன்னிரண்டுமாம். உ-ம்.—

"சொல்லி னீரிவ ராசைப்பட் டாரென்று
சொன்ன சொற்பொருள் வேறுகொண் டையையோ
புல்லு வாரெவ் விதத்தினு மென்றுளம்
பூரித் தேயிருந் தேன்மட மங்கைமீர்
செல்லு லாம்பொழிற் கூவ நகருறை
திருவிற் கோல ரினுமரு ளாமையா
லல்ல தேது இகம்பா ரென்பொரு
ளறையின் வன்கண்ண ராவரென் மட்டுமே."

கட்டளைக்கலித்துறை-முதற்சீர் நான்கும் வெண்டளைபிழையாம னிற்பக் கடையொருசீரும் விளங்காயாகிவரு மைஞ்சீரடி நான்கு கொண்டுவரும்; ஓரடிக்கெழுத்து முதலசை நேராயிற் பதினாறும் நிரையாயிற் பதினேழுமாம். உ-ம்.—

"சிலைமலி வாணுத லெங்கைய தாகமெ னச்செழும்பூண்
மலைமலி மார்பி னுதைப்பத்தந் தான்றலை மன்னர்தில்லை
யுலைமலி வேற்படை யூரனிற் கள்வரில் லென்னவுன்னிக்
கலைமலி காரிகை கண்முத்த மாலை கலுழ்ந்தனவே."

எனவரும்.

சஈக. வஞ்சிப்பாவினிலக்கணமியாது?

பெரும்பாலுந் தன்றளையுஞ் சிறுபான்மை பிறதளையுந்தழுவி யிருசீரடியாலேனு முச்சீரடியாலேனு மூன்றுமுதலிய பலவடிகளைக்கொண்டு தனிச்சொற்பெற்று அகவற்சுரிதகத்தான் முடிவதாம். உ-ம்.—

"பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும், மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே."

இது குறளடிவஞ்சிப்பா.

"எறிவெண்டிரைக் கடல்சூழ்புவி யெளிதெய்தினு
மிறவந்துடைப் பொழுதய்ந்திட லுளதென்னினு
மறிவின்றிறத் துயர்ந்தோர்படி றிசைகின்றிலர், அதனால்
முன்வரு மின்பினு முறைப்பட நாடிற்
பின்வரு மிடர்மிகப் பெரிதா மெனலே."

இது சிந்தடிவஞ்சிப்பா.

சஉ. வஞ்சியின மூன்றனுள் வஞ்சித்தாழிசை யெவ்வாறுவரும்?

இருசீரடி நான்குகொண்ட தொருபொருண்மேன் மூன்றடுக்கி வரும். உ-ம்.—

"பிணியென்று பெயராமே
தனிநின்று தவஞ்செய்வீ
ரணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரே."

"என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரே."

"அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீ
ருருமன்ற லுமைபாகன்
றிருமன்று பணியீரே."

இது வஞ்சித்தாழிசை.

சூரு. வஞ்சித்துறை யெவ்வாறு வரும்?

இருசீரடி நான்குகொண்டு தனித்துவரும். உ-ம்.—

"பேரறி வன்னன்
சார விருந்த
ஆரினு மில்லென்
றூர விகழ்ந்தே."

எனவரும்.

சூச. வஞ்சிவிருத்த மெவ்வாறு வரும்!

முச்சீரடி நான்குகொண்டு வரும். உ-ம்.—

"சாந்த ஞெதிய தாழ்மொழி
காய்ந்த வேலிரு காதிலும்
போந்த போன்று புகுந்திட
மாந்த ராகுல மன்னினர்."

எனவரும்.

சூரு. மருட்பா வெவ்வாறு வரும்?

முன்னர்ச் சில வெண்பாவடிகளும் பின்னர்ச் சில வகவலடிகளுங் கூடிவரும். உ-ம்.—

"அரசியல் கோடா தரனடியார்ப் பேணு
முரசிய ஞானவேன் மன்னர்—பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழிய பெரிதே."

எனவரும்.

சுசு. நூற்பா வெவ்வாறுவரும்?

சிலவகையெழுத்துக்களாலாகிய சொற்றொடராய்ப் பல்வகைப்பொருள்களை விளக்கித் திட்பமு நுட்பமு மமைந்துவரும். உ-ம்.—

"எழுத்தெனப்படுவ
வகரமுத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே."

எனவரும்.

சுஎ. கூனென்ப தென்னை?

வெண்பாமுதலிய செய்யுட்களின் முதலடியி னோரோவிடத்துப் பொருள்படத் தனித்துநிற்பது கூனாம். அது வஞ்சிப்பாவின் முதற் கணன்றி யிடையிலு மிறுதியிலும் வரும். உ-ம்.—

"உதுக்காண்
சுரந்தானா வண்மைச் சுவாமமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழைப் பாடி."

எனவும்,

அவற்றுள், அ இ உ எ ஒக்குறிலைந்தே."

எனவும் வரும்.

யாப்பிலக்கணமுற்றிற்று.

# அணியிலக்கணம்.

௧. அணியென்பதியாது ?

செய்யுட் கழகுசெய்து நிற்பதாம்.

௨. அவ்வணி யெத்தனைவகைப்படும் ?

பொருளணியுஞ் சொல்லணியுமென விருவகைப்படும். இவ்விரண்டிலும் பொருளணியே சிறப்புடைத்தாம்.

௩. அப்பொருளணி யெத்தனை ?

உவமையணிமுதல் ஏதுவணி யிறுதியாக நூறும். அவற்றிற்கு முறையே பெயரும் விதியு முதாரணமும் வருமாறு.

உவமையணி:-அஃதாவது ; இரண்டுபொருள்களுக்கு ஒப்புமையை விளக்கச்சொல்லுதலாம். இதனை வடநூலார் உபமாலங்கார மென்பர். அது விரியுவமையுந் தொகையுவமையுமென விருவகைப்படும். அவற்றுள்.

விரியுவமையாவது—உபமானமும் உபமேயமும் பொதுத்தன்மையும் உவமையுருபும் ஆகிய நான்கும் விரிந்துவருவதாம். உதாரணம்:—

"பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனனாடன் கொல்லி
யயல்போலும் வாழ்வ தவர்."

இதில் பால்போலு மின்சொல் என்புழி, பால்—உபமானம்; சொல்—உபமேயம்; இனிமை-பொதுத்தன்மை; போலும்—உவமையுருபு.

தொகையுவமையாவது —உபமேயமொழிந்த மூன்றனுள் ஒன்றும் பலவுந் தொகுதலாகிய வேழுமாம். அவை உருபுத்தொகை, பொதுத்தன்மைத்தொகை, பொதுத்தன்மையுருபுத்தொகை, உவமானத்தொகை, உருபுவமானத்தொகை, பொதுத்தன்மையுவமானத்தொகை, பொதுத்தன்மையுருபுவமானத்தொகை எனப் பெயர்பெறுமென்றறிக. உ-ம்.—

"புயற்கருங் குழலாள் காந்தட் போதினை நிகர்க்குங் கையாள்
கயற்கணாள் முகத்திற் கொப்பாங் காந்திகொள் பொருளுண் டோவாய்
நயச்சிவப் புளதொன் றில்லை நாசிபோல் வதுமற் றாகுங்
குயிற்கிள வியினாள் பாவை குணத்தையார் குறிக்க வல்லார்."

இதில் அவ்வேழு முறையே காண்க. காந்திகொள் பொருளுண்டோ வென்புழி, பொரு ளுலகத்திலுள தாகவு மில்லையெனலால் உவமானத் தொகையாயிற்று. குயிற்கிளவியினாள் என்புழி, குயிலின திசைபோலு மதுரமாகிய கிளவியினாள் என விரித்துரைக்கவேண்டுதலால், குயிலின திசை உபமானமாம்.

வட நூலார், பொதுத்தன்மையைச் சாதாரணதருமமென்றும், உவமையுருபை உபமாவாசகமென்றும் ஒப்புமையைச் சாமியமென்றும் சாதிருசியமென்றுங் கூறுவர். 'போலப் புரைய வொப்பவுறழ, மானக் கடுப்ப வியைய வேய்ப்ப, நேர நிகர வன்ன வின்ன, வென்பவும் பிறவு முவமத் துருபே' என்பதனு லுவமையுருபறிக. க

இயைபின்மையணி:—அஃதாவது, ஒருவாக்கியத்துள் ஒருபொருளேயே யுபமானமாகவு முபமேயமாகவுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் அநந்வயாலங்காரமென்பர்; தண்டியாசிரியர் பொதுநீங்குவமை யென்பர். உ-ம்—

"தேனே யனையமொழிச் சேயிழையாள் செவ்வியினாற்
றானே யுவமை தனக்கு."

இதில், இப்பொருளுக்கொப் பிரண்டாவதொன்றில்லை யென்பது கருத்து. உ

புகழ்பொருளுவமையணி:—அஃதாவது, இரண்டு வாக்கியங்களுள் முன்னதி லுபமானமாகச்சொல்லப்பட்டதைப் பின்னதி லுபமேயமாக்கியும், உபமேயமாகச் சொல்லப்பட்டதை யுபமானமாக்கியுஞ் சொல்லுதல். இதனை வடநூலார் உபமேயோபமாலங்கார மென்பர்; தண்டியாசிரியர் இதரவிதர மென்பர். உ-ம்.—

"நின்புடை யறநிகர்த் தோங்கு நீள்பொரு
ளின்புடைப் பொருணிகர்த் தோங்கு மெய்தறந்
தன்புடைக் கடலுடைத் தாணி யோர்க்கெலா
மன்புடை முறைசிறந் தளிக்கு மண்ணலே."

எனவரும். அன்றியும்,

"களிக்குங் கயல்போலு நின்கணின் கண்போற்
களிக்குங் கயலுங் கனிவாய்த்—தளிர்க்கொடியே
தாமரை போன்மலரு நின்முக நின்முகம்போற்
றாமரையுஞ் செவ்வி தரும்."

எனத் தொன்றுதொட்டுவரு முபமானோபமேயங்களை யவ்வாறு சொல்வதுமது. இதன்கருத்து மூன்றுவதொப்ப தொன்றின் றெனப தாம். உபமேயம்—வர்ணியமென்றும், புகழ்பொருளென்றும், புனைவுளியென்றும்; உபமானம் — அவர்ணியமென்றும், அல்பொருளென்றும், புனைவிலியென்றுஞ் சொல்லப்படும். ௩

எதிர்நிலையணி:—அஃதாவது, உவமானத்திற்குக்குறைவுதோன்றச் சொல்லுதலாம். இது உவமையணிக்கு எதிரியதாய் நிற்றலின ப் பெயர்த்து. இதனை வடநூலார் பிரதீபாலங்கார மென்பர். அது ஐந்து வகைப்படும். அவற்றுள்,

க—வது —உலகத்தி லுபமானமாய்ப் பிரசித்தமாக வழங்குகின்ற பொருளை யுபமேயமாக்கிச் சொல்லுதல். உ-ம்.—

"அதிர்கடல்சூழ் வையத் தணங்குமுகம் போல
மதியுஞ் செயுமே மகிழ்."

உ—வது —அவர்ணியத்தை யுபமேயமாகக்காட்டி வர்ணியத்தை யிகழ்தல், உ-ம்.—

"பொன்செருக்கை மாற்றுமெழிற் பூவை திருமுகமே
யுன்செருக்குப் போது மொழிகவினிக்—கொன்செருக்கு
மிக்கமக ரக்கடற்பூ மிக்கண் மகிழ்செயலா
லொக்கு மதியு முனை."

௩—வது —வர்ணியத்தை யுபமேயமாகக்காட்டி அவர்ணியத்தை யிகழ்தல். உ-ம்.—

"லூற்ற லூறுகொலையி லாமெனக்கொப் பென்றந்தோ
கூற்றுவநீ வீண்செருக்குக் கொள்கின்றாய்—சாற்றுவல்கேள்
வெண்டிரைசூழ் ஞால மிசையுனக்கொப் பாகவே
யொண்டொடிதன் னீள்விழியு முண்டு."

௪—வது —வர்ணியத்தோடு அவர்ணியத்திற்கு ஒப்புமையின்றெனச்சொல்லுதல். உ-ம்.—

"இறைவி மதாமொழிக் கின்னமுதொப் பாமென்
றறைவ தபவாத மாம்."

ரு-வது—உபமானத்தை வீணென்று சொல்லுதல். உ-ம்.—

"செங்கயற்க ணுயுன் றிருமுகத்தைப் பார்ப்பவர்க்குப்
பங்கயத்தா லுண்டோ பயன்." ௪

உருவகவணி:—அஃதாவது, உபமேயத்தி லுபமானத்தை யொற்றுமையினாலாவது அதன்செய்கையினாலாவது ஆரோபித்தலாம். இதனை வடநூலார் ரூபகாலங்கார மென்பர். ஆரோபமாவது உபமானவுபமேயங்களி னபேதவுணர்ச்சி. அது, ஒற்றுமையுருவகம் அதன்செய்கையுருவகம் என விருவகைப்படும். இவற்றை வடநூலார் அபேதரூபகமென்றுந் தாத்ரூப்பியரூபகமென்றுங் கூறுவர். அவ்விரண்டும் மிகை, குறை, அவையின்மை என்பவைகளான் மும்மூன்றும். அவற்றுள்,

க-வது—மிகையொற்றுமையுருவகம். உ-ம்.—

"உயர்புகழ்நங் கோனு முருவுடைய மார
னயவழகை நாடுமென் கண்."

இதில், மாரனுக்கு உருவ மிகையாகச் சொல்லப்பட்டது.

உ-வது—குறையொற்றுமையுருவகம். உ-ம்.—

"எல்லாரு மேத்துபுக ழேந்தலிவ னெற்றிவிழி
யில்லாத சங்கரனே யாம்."

இதில், சங்கரற்கு நெற்றிக்கண் குறைவாகச்சொல்லப்பட்டது.

ங-வது—அவையிலொற்றுமையுருவகம். உ-ம்.—

"பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற் படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலனடத்த வளர்ந்தெழுஞ் சோண சைலனே கயிலைநா யகனே."

இதில், கடன்முதலியவை மிகைகுறைவின்றிச் சமனாகச் சொல்லப்பட்டன.

௪-வது—மிகையதன்செய்கையுருவகம். உ-ம்.—

"மங்கை வதன மதியங் களங்கமுடைத்
திங்களைமிக் கெள்ளல் செயும்."

இதில், முகமதிக்குக் களங்கமில்லாமை யதிகமாகச் சொல்லப் பட்டது. ஈண்டு முகமதி யென்பதற்குச் சந்திரனது செய்கையுடைய முகமெனப் பொருள் கொள்க.

ரு-வது—குறைபதன்செய்கையுருவகம். உ-ம்.—

"பொருதிரைசேர் தண்பாற் புணரிபிற வாவே
யொருதிருவிம் மாதென் றுணர்."

இதில், இத்திருவுக்குப் பாற்கடலிற்பிறத்தல் குறைவாகச் சொல்லப்பட்டது.

சு-வது—அவையிலதன்செய்கையுருவகம். உ-ம்.—

"இம்மான் முகமதியே யின்பு செயுமதனு
லம்மா மதிப்பயனென் னும்."

இதில், முகமதிக்கு மிகையுங் குறையுஞ் சொல்லாமற் சமஞ்சொல்லப்பட்டதுகாண்க. ரு

திரிபணி.—அஃதாவது, உபமானப் பொருளானது அப்பொழுது நிகழ்கின்ற செய்கையிற் பயன்படுதற்பொருட் டுபமேயத்தினுருவத்தைக் கொண்டு பரிணமித்தலாம். இதனை வடநூலார் பரிணாமாலங்காரமென்பர். உ-ம்.—

"செய்ய வடிக்கமலத் தாலத் திருந்திழையாள்
பைய நடந்து பசும்பொழிலுற்—றுய்ய
வலர்கட் குவளையினு னோக்கியகத் தன்பிற்
சிலசொற் றனளே தெரிந்து."

இதில், கமலமுங் குவளையுமாகிய வுவமானப்பொருள்கள், நடத்தலு நோக்கலுமாகிய செய்கையி லுபயோகித்தற் குபமேயரூபத்தைக் கொண்டு திரிந்தன. அடியுருக்கொண்டுதிரிந்த கமல மெனவும், கண்ணுருக்கொண்டுதிரிந்த குவளையெனவும் விரித்துரைத்துக்கொள்க. சு

பலபடப்புனைவணி.—இதனை வடநூலார் உல்லேகாலங்காரமென்பர். அது இருவகைப்படும். அவற்றுள்,

க-வது—ஒரு பொருளிற் பலரும் பலதருமங்களினாலே பலபொருள்களை யாரோபித்தல். உ-ம்.—

"ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே."

எனவரும்.

உ-வது — ஒருவரே யொருபொருளில் விஷயபேதங்களாற் பலபொருள்களை யாரோபித்தல். உ-ம்.—

"செல்வ மதிற்றனதன் செப்புகொடை யிற்கன்னன்
கல்விதனிற் சேடனிவன் காண்."

எனவரும்.

"தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
யருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திரும கன்றிரு மாநில மன்னனே."

இதுவு மது. எ

நினைப்பணி.—அஃதாவது, ஒரு பொருளைக்கண்டு ஒப்புமையினாலே மற்றொருபொருளை நினைத்தலாம். இதனை வடநூலார் ஸ்மிருதிமதாலங்கார மென்பர். உ-ம்.—

"காதலுறு கஞ்சமலர் கண்ட வெனது மனங்
கோதைமுகந் தன்னைநினைக் கும்." அ

மயக்கவணி.—அஃதாவது, ஒப்புமையினாலே யொருபொருளை மற்றொருபொருளாகவறிதலாம். இதனை வடநூலார் பிராந்திமதாலங்கார மென்பர். பிராந்தியாவது அதுவாகாததை யதுவெனவறிதல். உ-ம்.—

"மழைக்கண் மங்கையர் பயிறர மாகத மணியி
னிழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த பைந்தரு நீழலிற் குலவுமா னினங்க
டழைத்த புல்லென விரைவொடு தனித்தனி கறிக்கும்."

இதில் மாகதமணிக்கதிரைப் புல்லெனவறிந்தது காண்க. கூ

ஐயவணி.—அஃதாவது, ஒப்புமையினாலே யொருபொருளைக்கண் டிதுவோ அதுவோவெனச் சந்தேகித்தலாம். இதனை வடநூலார் சந்தேகாலங்கார மென்பர். உ-ம்.—

"தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொன்
மாதர் விழியுலவும் வாண்முகங்கொல்—யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
யொருபாற் படாதென் னுளம்."

எனவரும். ௧0

ஒழிப்பணி.—அஃதாவது, ஒரு தருமத்தை யாரோபித்தற்பொருட் டொருதருமத்தை மறுத்தலாம். இதனை வடநூலார் அபநுதியலங்கார மென்பர். இது அறுவகைப்படும். அவற்றுள்,

௧-வது—வெற்றொழிப்பு. இது உபமான தருமத்தை யாரோபித் தற்கு உபமேயதருமத்தை யொழித்தலாம். உ-ம்.—

"மதியன் றிதுபுகலின் வானதியிற் றோன்றும்
புதியதொரு வெண்கமலப் பூ."

௨-வது—காரணவொழிப்பு. இது, மேற்சொல்லப்பட்டவொழிப்பே காரணத்தோடுகூடி வருதலாம், உ-ம்.—

"பொங்கு வெம்மை பொழிதலி னாலிது
திங்க ளன்று தினகரன் றானன்று
கங்கு லாதலி னற்கட னின்றெழீஇத்
தங்கு றும்வட வைத்தழ லாகுமே."

௩-வது—வேறுபாட்டொழிப்பு. இது வர்ணியத்திலாரோபித்தற் பொருட்டு மற்றொரு பொருளின் றருமத்தை யொழித்தல். உ-ம்.—

"தெரியு மிதுதிங்க ளன்று செழும்பூ
ணரிவைமுக மேதிங்க ளாம்."

இதில், திங்களின்றரும மதனிடத் தொழிக்கப்பட்டு வர்ணியமாகிய முகத்திலாரோபிக்கப்பட்டது.

௪-வது—மயக்கவொழிப்பு. இது ஒரு பொருளை மற்றொரு பொருளென்றுகொள்ளும் பிராந்தியை யுண்மைகூறி யொழித்தல். உ-ம்.

"மனக்கினிய தோழி மடந்தைமுக நோக்கி
யுனக்குடலி னென்றியெழு வெப்பந்—தனக்குச்
சுரநோயோ காரணஞ் சொல்லெனவ தான்று
பொருமார னென்றனளப் பொன்."

இதில், மன்மதாவத்தையிலுண்டாகிய சுரப்பிராந்தி மாரனென்று கூறி பொழிக்கப்பட்டது.

ரு—வது—வல்லோரொழிப்பு. இது பிறரையமுற்றுவினவிய தஞ் சொல்லி னுண்மைப்பொருளை வல்லோர் அச்சொல்லுக்கு மற்றொரு தாற்பரியத்தைக் கற்பித்து மறுத்தல். உ-ம்.—

"இலங்கயிற்க றளிகுளைக் கென்காலைப் பற்றிப்
புலம்பியதுண் டென்று புகல—விலங்கிய
னின்றவரு மற்றொருத்தி நின்கணவ னேவென்ன
வன்றுசிலம் பென்றா ளவள்."

௬—வது—வஞ்சக வொழிப்பு. (வஞ்சகம்—கபடம்.) இது பெயர் முதலியசொற்களால் வர்ணியத்தினது தருமத்தை மறுத்தல். உ-ம்—

"இம்மடந்தை கட்கடைநோக் கென்னும் பெயரினைக்கொண்
டம்மதவேள் வாளி யடும்." ௧௧

தற்குறிப்பணி.—அஃதாவது, ஒரு பொருளை மற்றொருபொருளினது தருமசம்பந்தத்தினாலே யிஃது தஃதன்றென்று தெரிந்திருந்து மப்பொருளாக அத்தியவசயித்தலாம். இதனை வடநூலார் உத்ப்ரேக்ஷாலங்கார மென்பர். அத்தியவசாயமாவது ஒரு பொருளின் மற்றொரு பொருளினபேதத்தை யையத்துடனறிதல். அத்தியவசாயம்—சம்பாவனை—தற்குறிப்பு—உத்ப்ரேக்ஷை என்பன வொருபொருட் சொற்கள். ஒரு பொருளெனப்பட்டதை விஷயமெனவும் புலமெனவும், மற்றொரு பொருளெனப் பட்டதை விஷயியெனவும் புலக்கொளியெனவுஞ் சொல்லுவர். போல, நினைக்கின்றேன், நிச்சயம், உண்மை, துணிவு முதலிய சொற்க ளிதற்குருபுகளாய் விரிந்தேனுந் தொக்கேனும் வரும்.

அது பொருட்டற்குறிப்பு, ஏதுத்தற்குறிப்பு, பயன்றற்குறிப்பு என மூவகைப்படும். இவற்றை முறையே வடநூலார் வஸ்தூத்ப்ரேக்ஷை, ஏதூத்ப்ரேக்ஷை, பலோத்ப்ரேக்ஷை என்பர். இவற்றுள் விஷயம்விரிந்து நிற்றலுந் தொக்குவருதலுமாகிய விரண்டாலும் பொருட்டற்குறிப்

பிரண்டாம் ஒழிந்தவிரண்டும் விஷயமுளதாதலு மிலதாதலு மாகிய விரண்டாலு மிவ்விரண்டாம். அவை முறையேகூறுதும்.—

க-வது—விரிபுலப்பொருட்டற்குறிப்பு.

"நேமிப் பெடைத்திரளி னெஞ்சங் கனிற்றோன்றுங்
காமத் தழலிற் கதித்தோங்கு—தூமத்தின்
கூட்ட மெனவே குறிக்கின்றேன் மேதினிமே
லூட்ட மறையிருளை நான்."

இதில், இரவின்கணெங்கும் வியாபித்த விருளிற் கருமை கண் மறைத்தன் முதலிய தருமசம்பந்தத்தினா லப்போது தத்தஞ்சேவலைப் பிரிவுற்றுப் பலவிடங்களிலுமிருக்கின்ற சக்கரவாகப்பேடைகளினுள்ளத் தெரிந்தெழுதற்கு மூளுகின்ற காமத்தீயிற்றோன்றும் புகைக்கூட்டமாகிய பொருளினபேத மத்தியவசயிக்கப்பட்டது இருளாகிய விஷயம் விரிந்துநின்றது. புகைக்கூட்டம் விஷயி. இவண் முகத்தைச் சந்திரனென்றுநினைக்கின்றேன் என்பது மது.

உ-வது—தொகுபுலப்பொருட்டற்குறிப்பு. உ-ம்.—

"காரிரு ளங்கங் களைப்பூ சுதல்போலும்
பேருலகந் தன்னிற் பெரிது."

எனவும்,

"மைம்மா ரியைவானம் பெய்வதுமா னத்தோன்று
மிம்மா நிலத்தி னிருள்."

எனவும் சொல்லப்பட்ட விவ்விரண்டிலும், இருளது வியாபித்தலில் விண்முதன் மண்ணீறு மெல்லாவற்றையுங் கரியனவாக்குதலாகிய தரும சம்பந்தத்தினாலே இருளை வினைமுதலாகவுடைய பூசுதலினது அபேதமும் ஆகாயத்தைக் கருத்தாவாகவுடைய மைம்மழைபெய்தலினது அபேதமும் அத்தியவசயிக்கப்பட்டன. இவ்விரண்டிலு மிருளினது வியாபித்தலாகிய விஷயந் தொக்குவந்தது. பூசுதலும் பெய்தலும் விஷயிகள்.

ங-வது—உளபுலவேதுத்தற்குறிப்பு. உ-ம்.—

"ஏந்திழைநின் றாளவணி யின்மேன் மிதித்தலினாற்
சேந்தனவென் றுள்ளுமென்னெஞ்சு."

இதில், பாதங்களின தியற்கைச்சிவப்பிற் கேதுவாகாத பூமியின் மிதித்தலில் ஏதுத்தன்மை அத்தியவசயிக்கப்பட்டது. மிதித்தலாகிய விஷயமுளதாதுகையா லுளபுலமாம். ஏதுத்தன்மை விஷயி.

௪-வது—இல்புலவேதுத்தற்குறிப்பு. உ-ம்.—

"முகவொளியைப் பாவாய் பெறற்குமுண்ட கத்தோ
டிகலுமதி யைய மிலே."

இதில், இயல்பினுண்டாகிய தாமரைமதிகளின் பகைக்கேதுவாகாத பாவைமுகத்தொளிவிருப்பத்தி லேதுத்தன்மை யத்தியவசயிக்கப் பட்டது. அவ்விருப்ப மதிக்கின்மையா லில்புலம். விருப்பம் விஷயம், ஏதுத்தன்மை விஷயி.

௫-வது—உளபுலப்பயன்றற்குறிப்பு. உ-ம்.—

"குயிற்றிரளை யோட்டுமொழிக் கோமளமின் னேகின்
வயிற்றுமடிப் பாகியநல் வண்பொற்—கயிற்றினுன்
மொட்டுண்ட பார முலையைச் சுமந்திடற்குக்
கட்டுண்ட தோகின் னிடை."

இதில், இடையானது கொங்கைகளைத் தன்னியல்பிற் சுமத்தலான் மடிப்பாகிய பொற்கயிற்றின் கட்டிக்குப் பலனுகாதிருக்க வச்சுமத்தலிற் பலத்தன்மை யத்தியவசயிக்கப்பட்டது. சுமத்தலாகியவிஷய முளதாகுகையால் உளபுலம். பலத்தன்மை விஷயி.

௬-வது—இல்புலப்பயன்றற்குறிப்பு. உ-ம்.—

"ஒண்டொடிகே ளுன்பதசா யுச்சியத்தை யுற்றிடற்கே
முண்டகமென் போது முதுசிலத்திற்—றண்டுறைநீர்
நின்றிருந் தாளி னெடிது தவம்புரியு
மென்றறைதற் கைய மிலே."

இதில் கமலத்தினது நீரிலுறைதலாகிய தவஞ்செய்வதற்குப் பலனுகாத பதசாயுச்சியமடைதலிற் பலத்தன்மை யத்தியவசயிக்கப்பட்டது. பதசாயுச்சியமடைதலாகியவிஷயங் கமலத்திற்குமெய்ம்மையாக வின்மையா லில்புலமாம். பலத்தன்மை விஷயி. ௧௨

உயர்வுநவிற்சியணி.—அஃதாவது, ஒருபொருளானது தன்சொல்லாற் சொல்லப்படாமற் கேட்போரை மகிழ்விப்பதும், இஃ தஃதன்

றென்றுதெரிந்துந் தன்னிச்சையா லாமென்று கொள்ளப்படுவதுமாகிய வாரோபநிச்சயத்திற்கு விஷயமாகுதலாம். இதனை வடநூலார் அதிசயோக்தியலங்காரமென்பர். அது ஏழுவகைப்படும். அவற்றுள்,

க-வது—உருவகவுயர்வுநவிற்சி. இது உபமேயத்தை யதன் சொல்லாற் சொல்லாம லுபமானச் சொல்லின லிலக்கணையாகச் சொல்லுதல். உ-ம்.—

"புயலே சுமந்து பிறையே யணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தி
னயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை யன்னஞ்செந்நெல்
வயலேய் தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே."

இதில், புயன் முதலிய வுபமானச் சொற்களாற் கூந்தன் முதலிய வுபமேயங்க ளிலக்கணையாகச் சொல்லப்பட்டன.

உ-வது—ஒழிப்புயர்வுநவிற்சி. இது முன்சொன்ன வுயர்வுநவிற்சி யொழிப்போடுகூடிவருதல். உ-ம்.—

"பைந்தொடிநின் சொல்வி லமுதுளதாற் பாமரர்க
ளிந்துவிடத் துண்டென்ப ரே."

இதில், அமிர்தமென்னப்பட்ட வுபமானத்திற் சொல்லிலிருக்கின்ற மாதுரியமாகிய வுபமேயஞ் சொல்லப்பட்டுச் சந்திரனிடத்தில்லை யென்பதா லொழிப்பையுட்கொண்டிருக்கின்றது.

ந-வது—பிரிநிலையுயர்வுநவிற்சி. இது, உலகத்திற் பிரசித்தமாகிய தீரம், உருவம், செல்வ முதலியவைகட்கினமாகிய தீராதிகளைப் பிரித்துச் சொல்லுதல். உ-ம்.—

"பாந்தண் முடியிற் பரிக்குங் குவலயத்தில்
வேந்தனது தீரமொன்றும் வேறு."

எனவும்,

"போதார் மலர்க்கூந்தற் பூவை யிவள்படைப்புச்
சாதா ரணமான தன்று."

எனவும்வரு மிவைகளில், தீரத்திலும் படைப்பிலு மிருக்கின்ற வபேதத்திற் பேத மாரோபிக்கப்பட்டது.

ச-வது—தொடர்புயர்வுநவிற்சி. இது சம்பந்தமில்லாதிருப்பச் சம்பந்தத்தைக் கற்பித்தல். உ-ம்.—

"அகழு மிஞ்சியு மண்டத்தி னடிமுடி காறும்
புகுது மென்றுதம் மாற்றலான் முரணுபு புகுங்கா
லிகலும் வெஞ்சினச் சேடனே டிராகுவென் றுரைக்கு
நிகரில் பாம்புக ணெறியிடைக் காண்டலு நின்ற."

இதில், சம்பந்தமில்லாமையிற் சம்பந்த மாரோபிக்கப்பட்டது. அன்றியுஞ் சம்பந்தமிருக்கச் சம்பந்தமில்லாமையைக் கற்பித்தலு மது. உ-ம்.—

"அற்பகத்தின் மன்னவனே நீயருள்செ யாநிற்பக்
கற்பகத்தை யாம்விரும்போங் காண்."

இதில், கற்பகத்தை விரும்புதலின் சம்பந்தமிருக்க வதி லதனதில்லாமை யாரோபிக்கப்பட்டது.

ரு-வது—முறையிலுயர்வுநவிற்சி. இது காரணமுங் காரியமு மொருகாலத்தி னிகழ்வனவாகச் சொல்லுதல். உ-ம்.—

"மன்னநின் கணையு மொன்னலர் கூட்டமு
மேசகா லத்தினு ணிகந்தோ டினவெனி
லுன்புகழ்த் திறத்தினை யுணர்ந்து
மன்பதை யுலகுள்யார் பாடவல் லாரே."

இதில், அம்பினது தாக்குகையாகிய காரணத்திற்கும் அரசர்களினோட்டமாகிய காரியத்திற்கு முன்பின்றோன்றுகைத்தன்மையில் ஒருகாலத்திலுண்டாகுகை கற்பிக்கப்பட்டது.

"விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும்—பிரிந்தோர்
நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவிப்
பொறைதளரும் புன்மாலைப் போழ்து."

இதுவு மது.

சு-வது—விரைவுயர்வுநவிற்சி. இது காரணவுணர்ச்சிமாத்திரத்திலே காரியமுண்டாதல். உ-ம்.—

"அருளாக்கு நல்லறமுண் டாக்குமின் புண்டாக்குந்
தெருளாக்கு மென்றுளங்கொள் செம்மல்—பொருளாக்கற்
கேழையான் செல்வ னெனப்புகலா நிற்பவிர
லாழிவளை யாயிற் றவட்கு."

இதில், பிரிவுணர்ச்சியினாலே தானே நாயகியின்வாட்டமாகியகாரியம், மோதிரம் வளையாயிற்றென்றதினால் விளங்கிற்று. காரியம்பிறத்தல் விஷயம்.

எ-வது—மிகையுயர்வுநவிற்சி. இது காரியத்தை முன்னுங் காரணத்தைப் பின்னு நிகழ்வனவாகச் சொல்லுதல். உ-ம்—

"வணங்கிபிறை யின்சொல் வழங்குமுனம் பேதைக்
குணங்கூட னீங்கிற் றுளத்து."

இதில், காரணகாரியங்களின் முன்பின்நிகழ்தலாகிய முறையில், முறைபிறழ வாரோபிக்கப்பட்டது. இறுதிக்கண்ணின்ற மூன்றலங்காரங்களுங் காரியவிரைவைச் சொல்வனவாம். ௧௯

ஒப்புமைக்கூட்டவணி.—அஃதாவது, வர்ணியங்களாகிய பல்பொருள்களையாயினும் அவர்ணியங்களாகிய பலபொருள்களையாயினும் பொதுவாகிய வொருதருமத்தின்முடித்தலாம். இதனை வடநூலார் துல்லியயோகிதாலங்கார மென்பர்.

க-வது—புனைவுளியொப்புமைக்கூட்டம்.—

"மாமதிதோன் றக்கணவர்த் தீர்ந்தமட வார்முகமுந்
தாமரைப்பூ வுஞ்சோர்ந் தன."

இதில், சந்திரோதயவர்ணனையிற் சோர்ந்ததாமரைக்கும் பிரிவுற்ற மாதர்முகங்களுக்கும் வாடுதலாகிய வொருதருமத்தின் முடிவுசெய்தது காண்க.

உ-வது—புனைவிலியொப்புமைக்கூட்டம். உ-ம்—

"தீதில் கழைச்சாறுந் தெள்ளமுத முங்கசக்குங்
கோதையிவள் சொல்லுணர்ந்தார்க் கு."

இதில், வசனமாதுர்யவர்ணனையில் அவர்ணியங்களாகிய கழைச்சாறு முதலியனவைகளுக்குக் கசப்பாகிய வொருகுணத்திலே முடிவுசெய்தது காண்க.

அன்றியு முறவினரிடத்தும் பகையினரிடத்துஞ் சமனாக நடந்ததாகச்சொல்லுதலு மோ ரொப்புமைக்கூட்டம். உ-ம்.—

"வீரமிகு மன்னனிவன் விட்டார்க்கு நட்டார்க்குந்
தாரணியி னாக்கினனந் தல்."

இதில், நட்டவர்க்கு நந்தல் ஆக்கம்; விட்டவர்க்கு நந்தல் கேடு.

"விரும்பி வளர்ப்போர்க்கும் வெட்டுதல்செய் வோர்க்குந்
தரும்வேம்பு வெங்கசப்பைத் தான்."

எனவரும், இன்னும் உயர்வாகிய பொருள்களோடுகூட்டிச்சொல்வதுமது. உ-ம்.—

"ஈகுநர்கள் கற்பகமு மின்கதிர்ச்சித் தாமணியு
மேகமுமன் னாயீயு மே."

எனவரும். கச

விளக்கணி.—அஃதாவது, வர்ணியங்களு மவர்ணியங்களு மொரு தருமத்தின்முடிதலாம். இதனை வடநூலார் தீபகாலங்கார மென்பர். உ-ம்.—

"ஆதபத்தாற் சூரி யனும்பிரதா பத்தினன்
மேதகுவேந் தும்விளங்கு மே."

இதில், சூரியனும் வேந்தனும் விளங்குதலாகியவொருதருமத்தின் முடிதல் காண்க. கரு

பின்வருவிளக்கணி.—அஃதாவது, முன்வாக்கியத்தில்வந்த விளக்கச்சொல்லேனும் பொருளேனுஞ் சொல்லும் பொருளுமேனும் பின்வாக்கியங்களில் வருதலாம். இதனை வடநூலார் ஆவர்த்திதீபகாலங்கார மென்பர்.

க-வது—சொற்பின்வருவிளக்கு. உ-ம்.—

"மாரனமுங் கம்பெய்யு மான்கணமுங் கம்பெய்யும்
வீரனின்று வாரா விடின்."

உ-வது—பொருட்பின்வருவிளக்கு. உ-ம்.—

"அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டனசெங் காந்தள் குலை."

ங-வது — சொற்பொருட்பின்வருவிளக்கு. உ-ம்.—

“மகிழ்ந்த நெடுஞ்சா தகமகிழ்ந்த தோகை
புகழ்ந்திடுகொர் வானெழுந்த போது.” கசு

தொடர்முழுதுவமையணி.— அஃதாவது, இரண்டுவாக்கியங்களி லுஞ் சாதாரண தர்மத்தைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரதிவஸ்தூபமாலங்கார மென்பர் அது இருவகைப்படும்.

க-வது — நிகர்தொடர்முழுதுவமை. உ-ம்.—

“தாபத்தி னால்விளங்கும் வெய்யோன் றராபதிநீள்
சாபத்தி னால்விளங்குந் தான்.”

உ-வது — முரண்டொடர்முழுதுவமை. உ-ம்.—

“கற்றோ னருமைகற்றோ னேயறியும் வந்திமகப்
பெற்றோ ளருமையறி யாள்.”

இதில், கற்றோனே யறியுமென்றதற்கு, மலடியறியாளென்பதாற் றோன்றும் பெற்றவளேயறிவாளென்ப துபமானமாம்.

சொற்பொருட்பின்வருவிளக்கிற்கு மிதற்கும்வேற்றுமை—அதில், வர்ணியங்களாவது அவர்ணியங்களாவது சொல்லப்படும்; இதில் அவ்விரண்டுஞ் சொல்லப்படும். கள

எடுத்துக்காட்டுவமையணி.—அஃதாவது, பிம்பப்பிரதிபிம்ப பாவத்தைக்காட்டுதலாம். பிம்பப்பிரதிபிம்பபாவமாவது சுபாவத்திலே பின்னங்களாயிருந்தாலு மொன்றற்கொன்றுண்டாகிய வொப்புமையினால் அப்பின்னங்களாகிய வுபமானோபமேயங்களுடைய தருமங்களை யிரண்டு வாக்கியங்களிலே தனித்தனி சொல்லுதலாம். இதனை வடநூலார் திர்ஷ்டாந்தாலங்காரமென்பர். அது இருவகைப்படும். அவற்றுள்,

க-வது — நிகரெடுத்துக்காட்டுவமை. உ-ம்.—

“அண்ணனீ யேகீர்த்தி மானம் புவிதானே
வண்ணவுல கிற்காந்தி மான்.”

இதில், கீர்த்திக்குங் காந்திக்கும் பிம்பப்பிரதிபிம்பபாவஞ் சொல்லப்பட்டது.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

இதுவு மது.

உ-வது—புராணைந்துக்காட்டுவமை. உ-ம்.—

"மன்னவநின் னெஞ்சிற் சினந்தோன்ற மாநிலத்தி
லொன்னலர்தங் கூட்ட மொழிந்ததாற்—பன்னி
னெதனளவும் வெய்யோ னுதயவெற்பெய் தானே
யதனளவு மேவுமே யல்."

இதில், தோன்றவொழிந்ததென்றதற்கு, எய்தானே மேவும் என்னும் பகைப்பொருளாற் றேன்றுகின்ற அடைந்தா லிருணீங்குமென்பதொப்பாதல் காண்க. ௧௮

காட்சியணி—இதனை வடநூலார் நிதர்சனலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது—வாக்கியப்பொருட்காட்சி. அஃதாவது, இரண்டுவாக்கியார்த்தங்களுக்கு ஐக்கியத்தையாரோபித்தல். உ-ம்.—

"முறைகெழுவள் ளற்கு முனிவின்மை திங்கட்
கறைகளங்க மில்லாமை யாம்."

இதில், கோபமில்லாமையிற் களங்கமில்லாமை யாரோபிக்கப்பட்டது.

உ-வது-பதப்பொருட்காட்சி. அஃதாவது, உபமானோபமேயங்களுளொன்றி லொன்றனது தருமத்தை யாரோபித்தல். உ-ம்—

"குவளை மலரழகைக் கொண்டனசீ ரார்ந்து
கவினுமிளந் தோகாய்நின் கண்."

எனவும்,

"மருத்தகுகோ தாய்நின் வதனத் தொளியைத்
தரித்துளதா லொண்சீர்ச் சசி."

எனவும் வருமிவற்றுள், முறையே உபமேயத்தி னுபமானதருமமும் உபமானத்தி னுபமேயதருமமு மாரோபிக்கப்பட்டன.

ங-வது—பொருட்காட்சி. அஃதாவது, தன்செய்கையினானற்பொருளையாயினுந் தீப்பொருளையாயினுந் தெரிவித்தல். உ-ம்.—

"ஆதவனற் செல்வந் தனக்குப் பலனடுத்தோர்க்
கீத லெனல்விளக்கா நின்றெழீஇத்—தாதொடுதேன்
மல்கு கமல மலர்க்கொருதன் காந்திவளை
நல்குகின்றான் பேருலகி னன்கு."

இது நற்பொருட்காட்சி.

"அற்பனுயர் வாமிடத்தை யண்மினுங்கீழ் வீழ்வதலா
னிற்பதிலை யென்னு நெறிவிளக்கி—வெறபின்
சிகரமுறு நீர்த்திவலை தென்றலிற்றாக் குண்டு
மிகநடுங்கிக் கீழே விழும்."

இது தீப்பொருட்காட்சி.

"வெண்மதிதோன் றத்திமிரம் வேந்தன் பகையழித
லுண்மையெனல் காட்டிற் றெழுந்து."

இதுவுமது. வேந்தன் சந்திரனுக்கு மரசனுக்குஞ் சிலேடை. ௧௯

வேற்றுமையணி.—அஃதாவது, உபமானோபமேயங்களில் யாதேனு மொன்றை விசேடமுடைத்தாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் வியதிரேகாலங்காரமென்பர். உ-ம்—

"மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்."

இதில், உபமேயமாகிய கச்சிக்கு அதிகஞ்சொல்லப்பட்டது.

"நறைமலர்த்தார்க் கூந்தலுடை நாரி முகமு
நிறைமதியு நேரொக்கு மேனு—முறைதெரியின்
மாலிருளை யாக்கு மடந்தைமுகம் பூதலத்தின்
மாலிருளைப் போக்கு மதி."

இதில், உபமானமாகியமதிக்கு மாலிருள்போக்குதல் அதிகமாகச் சொல்லப்பட்டது. மால்=மயக்கமும் பெருமையும். ௨0

உடனிகழ்ச்சியணி.—அஃதாவது, கற்றோரைமகிழ்விக்கு முடனிகழ்தலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் சகோக்தியலங்கார மென்பர்; தண்டியாசிரியர் புணர்நிலை யென்பர். உ-ம்.—

"இகந்த பகைவ ரினத்தொடுவேல் வேந்தே
திகந்த மடைந்ததுநின் சீர்."

எனவரும். இதற்கு ஒடு ஓடு என்னு மூன்றும்வேற்றுமையுருபு வரும். உக

இன்மைநவிற்சியணி. அஃதாவது, யாதேனுமொன்றனில்லாமையால் வர்ணியத்தை யுயர்வடைவதாகவேனுந் தாழ்வடைவதாகவேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் விநோக்தியலங்காரமென்பர். உ-ம் —

"மறங்கொள் கொடியோ ரிலாமையினெம் மன்ற
சிறந்துளதுன் பேரவைசீர் சேர்ந்து."

இதில், தீயரில்லாமையாற் சபைக்குயர்வு சொல்லப்பட்டது.

"புகழ்க்குரியன் கற்றோ னெனினும் புவியி
லிகழ்க்குரியன் சாந்தமில னேல்."

இதில், சாந்தமில்லாமையாற் கற்றோனுக்குத் தாழ்வுசொல்லப்பட்டது. உஉ

சுருங்கச்சொல்லலணி.—அஃதாவது, அடைமொழியொப்புமையாற்றலால் அல்பொருட்செய்திதோன்றப் புகழ்பொருட்செய்தியைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் சமாசோக்தியலங்கார மென்பர். உ-ம்.—

"இந்தக் கன்னி மதிமுழுநோக் கெய்திச் செவ்வாய் வலியடைந்து
சந்தச் சிங்கந் தனையடுத்த தக்க வரவின் வலிசார்ந்து
முந்தைக் கொடிமீ னத்தலைவன் முனிவ ராகும் பகைவெல்லக்
கந்தப் பகழி பலவேழக் கருப்புச் சிலையிற் றொடுத்தனனால்."

இதில், வர்ணிக்கப்படுகின்ற மன்மதவிர்த்தாந்தத்தில் அவர்ணியமாகிய கோசாரபலம் பார்த்துப் போர்க்குச்செல்லு மரசர்விர்த்தாந்தந் தோன்றிற்று. இது சிலேடைவிசேஷணம்.

"கொந்தார் குழல்சரியக் கோல முகம்வியர்ப்பச்
சந்தார் திதலைத் தனமசையப்—பந்தேநீ
சிற்றிடையா ளார்வமொடு தீண்டிவிளை யாடுதற்கு
நற்றவமென் செய்தாய் நவில்."

இதில், பங்தின் சமாசாரம் வர்ணிக்கப்பட்டுக்கொண்டிருக்க விபரீதப்புணர்ச்சியிலிச்சையுடைய நாயகன் சமாசாரந் தோன்றிற்று. இது பொதுவடை. உரு

கருத்துடையடையணி.—அஃதாவது, அபிப்பிராயத்தோடு கூடிய விசேஷணத்தைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிகராலங்காரமென்பர். உ-ம்.—

"திங்கண் முடிசேர் சிவனுமது தாபத்தை
யிங்ககற்றி யாள்க வினிது."

இதில், திங்கண்முடிசேர் என்னு மடைமொழி தாபத்தைநீக்கவல்லனென்னுங்கருத்தை யுட்கொண்டிருக்கின்றது.

"நெடுங்கோலச் சென்னிமிசை நீர்கொளா னேநங்
கொடுங்காமத் தீயையவிக் கும்."

இதுவு மது.

"வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா லிளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல ஞனினிச்சென்
றுளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே."

இதில், விசேஷணம் வாக்கியரூபமாயிருக்கின்றன. சிறுத்தொண்டருமல்லேன் திருநீலகண்டருமல்லேன் கண்ணப்பருமல்லே னென்பதாம். உச

கருத்துடையடைகொளியணி.—அஃதாவது, அபிப்பிராயத்தோடு கூடிய விசேஷியத்தைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிகராங்குராலங்காரமென்பர். உ-ம்.—

"முக்கணனே யன்புடையார் மும்மலநீக் கப்பார்க்கத்
தக்கவனென் றென்னெஞ்சே சார்."

இதில், முக்கணனென்னும் விசேஷியம் ஆணவமுதலிய மும்மலங்களையு நீக்கவல்லனென்னுங்கருத்தை யுட்கொண்டிருக்கின்றது.

"சீர்த்தநின் புகழ்கூ றற்குச் சேடனு மெழுதற் கந்தக்
கார்த்தவீ ரியனும் வேந்துங் கரிசறு நலத்தி னோடு
பார்த்திடற் கமரர் கோனும் வல்லரால் லதுபாண் வண்ட
ரார்த்திடு தாரோ யேனோர்க் காவது தாமென் றன்றோ."

இதில், விசேஷியங்கள் வாக்கியரூபமாகவந்தன.

௨௫ பல்பொருட்சொற்றொடரணி. அஃதாவது, பலபொருள்களைத் தருதற்குரிய சொற்களைப் புணர்த்துக்கூறுதலாம். இதனை வடநூலார் சிலேஷாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும் அவற்றுள்,

க-வது—புணர்வுளிப்பல்பொருட்சொற்றொடர். உ-ம்.

"மணிமுடிமேற் கொண்டுலகை மாட்சிபெறத் தாங்கி
யணிநற் பொறிநிறஞ்சேர்ந் தாரும்—பணியிறைமை
மிக்கபுகழ் நீளரியே மேவுகூ வத்திறைக்குத்
தக்கவில்லிற் சேர்நாரி தான்."

இது திருமாலுக்கு மனந்தனுக்குஞ் சிலேடை. அவ்விரண்டும் வர்ணியங்களாம். கூவம்—ஒருதலம்.

உ-வது—புணர்விலிப்பல்பொருட்சொற்றொடர். உ-ம்.—

"தெருட்டுங் கலைபலவுஞ் சேர்ந்த மதியை
மருட்டு முகத்தினளம் மான்."

இது சந்திரனுக்கும் புத்திக்குஞ் சிலேடை. இவ்விரண்டுமவர்ணியம்

ந-வது—இருமைப்பல்பொருட்சொற்றொடர். உ-ம்.—

"வர்க்கதிர் வாள்கொடே யீர்வர் வீக்கிமெய்
வேர்க்கவங் கெடுத்துராய் வீழ்த்தி யெற்றுவர்
சூர்க்கரும் பகட்டினுற் றுவைப்பித் தார்ப்பராற்
போர்க்களம் புகுந்துபோர் புரிந்த மன்னரே."

இதில், நெற்போர்படுத்தல் வர்ணியம்; அமர்செய்தலவர்ணியம்.

௨௬ புனைவிலிபுகழ்ச்சியணி.—அஃதாவது, அவர்ணியத்தை வர்ணிக்க வருதனது சம்பந்தத்தால் வர்ணியந்தோன்றுதலாம். இதனை வடநூலார் அப்ரஸ்துதப்ரசம்சாலங்கார மென்பர். அது ஐந்துவகைப்படும். அவற்றுள்,

க-வது—ஒப்புமைப்புனைவிலிபுகழ்ச்சி. இது அவர்ணியத்தினுஞ் சம்பந்தத்தினால் வர்ணியந்தோன்றுதல். உ-ம்.—

"மேதகுசீர்க் காரையன்றி வேறுன் றையுமிரவாச்
சாதகமே புள்ளிற் றலை."

இங்கே யவர்ணியமாகிய சாதகப்புள்வர்ணனையில் அதற்கொப்பாகிய வொருமன்னனைச்சேர்ந்து பிறரையாசியாத மானியின்செய்தியாகிய வர்ணியந்தோன்றிற்று.

உ-வது — பொதுப்புனைவிலிபுகழ்ச்சி. இது அவர்ணியமாகிய பொதுப்பொருளால் வர்ணியமாகிய சிறப்புப்பொருடோன்றுதல். உ-ம் —

"மைந்தகேள் கல்வி வளமுணரா மாந்தரெலா
மந்தகரே யாவ ரவர்வடிவிற் — சந்தந்
தவழ்திரைக ளார்த்தெழூஉந் தண்கடல்சூழ் வையத்
தவிழ்முருக்கம் பூவினிற மாம்."

இதில், தந்தை விளையாட்டுச்சிந்தையையுடைய மைந்தற் கறிவு கொளுத்தலாகிய சிறப்புப்பொருடோன்றப் பொதுப்பொருள்சொல்லப் பட்டது.

௩-வது — சிறப்புப்புனைவிலிபுகழ்ச்சி. இது அவர்ணியமாகிய சிறப்புப்பொருளால் வர்ணியமாகிய பொதுப்பொருடோன்றுதல். உ-ம்.—

"மன்னு மிருகமதைத் தாங்கு மதிகளங்க
னென்னும் பெயர்கொண் டிழிவுற்றான் — பன்மிருகக்
கூட்டங்கொல் சீயமிடல் கொண்மிருக ராசனெனப்
பீட்டினொடு கொண்டதொரு பேர்."

இதில், கொடியவன் புகழுடைவான், மெல்லியன் புகழுடையானென்கிற பொதுப்பொருட்டோன்றச் சிறப்புப்பொருள் சொல்லப்பட்டது.

௪-வது — காரணப்புனைவிலிபுகழ்ச்சி. இது அவர்ணியமாகிய காரணத்தால் வர்ணியமாகிய காரியந்தோன்றல். உ-ம். 'ஒழுகொளி விரிந்த கதிர்மணி வண்ண னுந்தியந் தாமரைவந்தோன், முழுமதிக் கலையு ணிறைந்தபே ரழகை மொண்டுகொண் டரிபாந் தகன்ற, மழைமதர் நெடுங்கட் டமயந்தி வதனம் வகுத்தனன்' இதில், காரணமாகச்சொல்லப்பட்ட சந்திரசாரத்தினால் உயர்வுடைய முகத்தழகாகியகாரியந்தோன்றிற்று.

௫-வது — காரியப்புனைவிலிபுகழ்ச்சி. இது அவர்ணியமாகிய காரியத்தால் வர்ணியமாகிய காரணந்தோன்றுதல். உ-ம்.—

"மருக்கமழ்பூங் கோதை மடநடையைக் காணிற்
செருக்கடையா தன்னத் திரள்."

இதில், செருக்கடையாமையாகிய காரியத்தினாலே மெல்லிய நடையழகாகியகாரணந் தோன்றிற்று. உஎ

புனைவுளிவிளைவணி.—அஃதாவது, சொல்லப்பட்ட வொருவர்ணியத்தினாற் சம்மதமாகிய மற்றொரு வர்ணியந் தோன்றுதலாம். இதனை வடநூலார் பிரஸ்துதாங்குராலங்கார மென்பர். உ-ம்.—

"அம்புயநற் போதிருப்ப வஞ்சிறைவண் டேகொடுமுட்
பம்புகைதை யாலென் பயன்."

இதில், தடாகக்கரையில் தலைவனுடன் விளையாடுந் தலைவிசொல்லிய வர்ணியமாகிய வண்டின்சமாசாரத்தினான் மனோகரமாகிய வவளைவிட்டு அச்சமுறுத்தும் பரத்தைபாற்செல்லுந் தலைவனிந்தையாகிய மற்றொரு வர்ணியந் தோன்றிற்று. உஅ

பிறிதினவிற்சியணி—இதனை வடநூலார் பரியாயோக்தாலங்கார மென்பர். அது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

கஆவது—கருதியபொருளை யதற்குரியவிதத்தாற்கூறாது மற்றொரு விதத்தாற் கூறுதல். உ-ம்—

"இராகு மனைவிமுலைக் கில்பயனைச் செய்தோற்—பராவுகநீ நெஞ்சே பணிந்து."

இதில், வாசுதேவனை யிராகுவைவென்றவ னென்னாது அப்பொருடோன்றப் பிறிதோராற்றாற் கூறினர்.

உஆவது—கபடத்திலே தன்னாலிச்சிக்கப்பட்டதைச் சாதித்தல். உ-ம்.—

"மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ—தன்னிகராஞ்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
யிந்தீ வரங்கொணர்வல் யான்."

இதில், தலைவியைத் தலைவனிடத்துவிட்ட தோழி மலர்க்குப்போதலாகிய கபடத்தினா லவ்விருவரு மெண்ணப்படி நடத்தலாகிய தன்னிஷ்டத்தைச் சாதித்தாள். உகூ

வஞ்சப்புகழ்ச்சியணி.—இதனை வடநூலார் வியாஜஸ்துதியலங்கார மென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க—வது—பழிப்பினுற் புகழ்ச்சி தோன்றல். அப்புகழ்ச்சி பழிக்கப் பட்ட பொருட்கேயாகியும் பிறிதொன்றற்காகியும் வரும். உ-ம்.—

"பேசுகொலை யாதிப் பெரும்பா தகர்தமையுந்
தேசுமிகு வானுலகிற் சேர்கின்றாய்—வீசுதிரை
பின்னியெழு மோதை பெரிதுறுபா கீரதியே
நின்னறிவென் னென்பேனி யான்."

இதில், விவேகமில்லையென்னு நிந்தையாற் பெரியோரைப்போல மகாபாதகரையுஞ் சுவர்க்கமடைவித்தலாகிய மகிமைதோன்றிற்று.

"அன்றிலங்கை யெரித்தகுரங் கெங்கெனவி ராவணன்பே ரவையோர் கேட்ப
நன்றியவிந் திரசித்து வென்பவனுற் பிணிப்புண்டு நண்ணி னுனிங்
கென்றிறைவ னடிபரவும் வானரர்க ளவனைநனி யிகழ்ந்து மோத
வொன்றியவச் சத்தினிரிந் தொளித்தவிட மங்கதன்யா னுணரே னென்றான்."

இதில், அனுமநிந்தையான் மற்றைவானரர்களுக்குப் புகழ்ச்சி தோன்றிற்று.

உ—வது—புகழ்ச்சியாற் பழிப்புத்தோன்றல். இதுவு மப்பொருட்கே யாகியு மற்றொரு பொருட்காகியும் வரும். உ-ம்.—

"எற்காகத் தூதர சன்புடை யேகி யிளங்கொடிநீ
யற்கா ரளகங் குலையமெய் வேர்வை யரும்பவந்தோ
பற்கா யமுநகத் தூறு நனியுறப் பட்டுநொந்தாய்
நிற்கா முறைசெய்வ கைமா றுமுண் டோவிந்த நீணிலத்தே."

இதில், நொந்தாயென்னும் புகழ்ச்சியா லெனக்காகவன்று நீ புணர் தற்குப்போயினை யென்னு நிந்தை தோன்றிற்று.

"இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லு—மொருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர்."

இதில், மான்புகழ்ச்சியாலரசன் சேவையில்வருந்திய தன் னிந்தை தோன்றிற்று.

ந—வது—புகழ்ச்சியாற் புகழ்ச்சிதோன்றல். உ-ம்.—

"சீரார்ந் திலகுசிறைச் செந்தார்ப் பசுங்கிள்ளை
வாரார் முலையாய்நின் வாயிதழ்க்கு—நேராகுங்
கொவ்வைக் கனிநுகர்தற் குத்தவமென் செய்ததோ
செவ்வைத் திறத்திற் றெரிந்து."

இதில், கிள்ளைப்புகழ்ச்சியால் வாயிதழினழகு தோன்றிற்று. ரு௦

வஞ்சப்பழிப்பணி.—அஃதாவது, நிந்தையினுனிந்தைதோன்றுதலாம். இதனை வடநூலார் வியாஜநிந்தாலங்கார மென்பர். உ-ம்.—

"நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடை
போதர விட்ட நமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னு
விறையே தவறுடை யான்."

இதில், இறைவனிந்தையாற் றீச்செய்கையுடைய மற்றொருவர் நிந்தைதோன்றிற்று. ருக

எதிர்மறையணி.—அஃதாவது, ஒழிப்பணிக்குவேறாகியுங் கேட்போரை மகிழ்விப்பதாகியு மிருக்கின்ற மறுப்பைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் ஆக்ஷேபாலங்கார மென்பர். அது மூவகைப்படும். அவற்றுள்,

க-வது—தன்னாற்சொல்லப்பட்ட பொருளை யொருநிமித்தத்தினால் மறுத்தல். உ-ம்.—

"ஒண்கதிர்த் திங்காணீ யுன்வடிவை யிங்கெமக்குக்
கண்களிகூ ரக்கடிது காட்டிடுவாய்—வண்கவின்கூர்
பூண்டாங்கு கொங்கையுடைப் பூவைமுக முண்டதனால்
வேண்டாபோ வெற்றுக்கு வீண்."

இதில், தான்விரும்பிய சந்திரதரிசனத்தை முகமிருக்கையால் வீணென்றுமறுத்தது காண்க.

உ-வது—மறுப்புத்தான் றள்ளுண்டு மற்றொருபொருளைத் தோன்றச்செய்தல். உ-ம்.—

"தண்ணறு வுண்டளிசூழ் தாமமணி திண்டிறற்றோ
ளண்ணலே யான்றூதி யல்லேன்காண்—வண்ணமிகு
வேயெனுந்தோ ளாண்மெய் விரகதா பம்வடவைத்
தீயெனவே தோன்றுஞ் செறிந்து."

இதில் அல்லேனென்னு மறை தள்ளுண்டு கூட்டுதற்குத்தக்க வஞ்சகச்சொல்லைநீக்கி யுண்மைகூறுவோர்தன்மையைக் காட்டிக்கொண்டு விரைந்துவந்து அவளைக் காப்பாற்றென்னு மற்றொருபொரு டோன்றிற்று.

ரு-வது—உடன்பாட்டுச்சொல்லான் மறுப்பைக்காட்டுதல் உ-ம்.—

"விளைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெங்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே—விளைதேன்
புடையூறு பூந்தார்ப் புனைகழலாய் போக்குக்
கிடையூறு வாராம லேகு."

இதில், ஏகென்னுமுடன்பாட்டுச்சொல்லாற் போகேலென்னு மறுப்புச் சுற்றத்தழுகையாற் குறிக்கப்பட்ட தலைவி யிறக்குமென்பதைக் கொண்டு காட்டப்பட்டது. ருஉ

முரண்விளைந்தழிவணி.—அஃதாவது, ஓரிடத்துள்ளனவுங் காரிய காரணங்களாகாதனவுமாகிய விரண்டு கருமங்களுக்கு மேன்மேலுந் தோன்றியழியும் பகைமையைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் விரோதாபாசாலங்காரமென்பர். உ-ம்.—

"சாந்தமில வாயுறினுஞ் சந்த முடையனவே
கொந்தவிழ்தார்ப் பாவை குயம்."

இதில், சந்தமில்லனவற்றைச் சந்தமுடையனவேயாமென்னும் பகைமை அழகுடையனவென்னும்பொருளா லழிந்தது. ருரு

பிறிதாராய்ச்சியணி.—அதனை வடநூலார் விபாவனலங்கார மென்பர். அது ஆறுவகைப்படும். அவற்றுள்,

க-வது—உலகறிகாரணமில்லாதிருப்பக் காரியம்பிறத்தலைச் சொல்லுதல். இதுவே பொதுவிதியுமாம். உ-ம்.—

"கடையாமே கூர்த்த கருநெடுங்கண் டேடிப்
படையாமே யேய்ந்ததனம் பாவாய்—கடைஞெமியக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
றூட்டாமே சேந்த வடி."

இதில், கடைதன் முதலிய பிரசித்தகாரணமில்லாமற் கூர்மையாதன் முதலியகாரியஞ் சொல்லப்பட்டன. இவற்றிற்கு இயல்பென்னும் பிறிதோர்காரண மாராய்ந்துகொள்ளப்பட்டது.

உ-வது—காரணத்தினது தருமமாவது சம்பந்தமாவது குறைவாகவிருப்பக் காரியப்பிறத்தலைச் சொல்லுதல். உ-ம்.—

"திண்மையுங் கூர்மையு மில்லாக் கணைகளைச் சிந்துபுவன்
கண்மையின் மூவுலகங்களும் வென்றவக் காமனிக
லுண்மை யுணர்ந்து மொருநீ மறந்திடி னெண்டொடிதன்
பெண்மையென் பாடு படும்புக லாயெம் பெருந்தகையே."

இதில், வெல்லுதற்கேதுவாகிய வம்பிலே திண்மையுங் கூர்மையுங் குறைவாம்.

ங-வது—காரியம்பிறத்தற்குத் தடையுளதாகவு மது பிறத்தலைச் சொல்லுதல். உ-ம்.—

"அடுத்த நின்பிர தாப வருக்கனீ
டுடுத்த பார்மிசை மன்னவ வொண்குடை
விடுத்த வேந்தரை விட்டு விடாதுமே
லெடுத்த வேந்த ரினத்தைக் கனற்றுமே."

இதில், பிரதிபந்தமான குடையிருப்பவுஞ் சுடுதலாகியகாரியம் பிறந்தது.

ச-வது—காரணமல்லாத மற்றொன்றாற் காரியம்பிறத்தலைச்சொல்லுதல் உ-ம்.—

"வழுவாத மானிவள்பால் வண்சங்கி னின்று
மெழுமேகல் பாழி னிசை."

ரு-வது—பகையாகிய காரணத்தினின்றுங் காரியம்பிறத்தலைச் சொல்லுதல். உ-ம்.—

"சீத்தரு சோமன் பொழிசீ தளக்கதிர்கள்
சோர்தரவெம் மாலதக் கும்."

சு-வது—காரியத்தினின்றுங் காரணம்பிறத்தலைச் சொல்லுதல். உ-ம்.—

"பற்பெருமன் காலுதித்த தேர்பெருகின் வன்மையெனுங்
கற்பகத்திற் சீர்ப்பாற் கடல்."

சீர்ப்பாற்கடல் கீர்த்தியாகிய பாற்கடல்.

காரணவாராய்ச்சியணி.—அஃதாவது, குறைவில்லாத காரணமிருந்துங் காரியம்பிறவாமையைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் விசேஷோக்தியலங்காரமென்பர். உ-ம்.—

"இறைமதனுந் தீப மெரிவுறு நின்றுங்
குறைவிலது நேயமென்றே கூறு."

இதில், விளக்காகிய காரணமிருந்துங் நேயநாசமாகிய காரியம் பிறவாமை காண்க. நேயமென்பது தைலமு மநுராகமுமாம். ௫௫

கூடாமையணி.— அஃதாவது, ஒரு காரியம்பிறத்தலை யருமையுடைத்தாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் அசம்பவாலங்காரமென்பர்.

"அடுக்கலையோர் கையினு லாயச் சிறுவ
னெடுக்குமென யாரறிவா ரிங்கு."

இதில், இடைக்குலச் சிறுவனுக்கு மலையெடுத்தலாகிய காரிய மரிதாகச் சொல்லப்பட்டது. கோவர்த்தனகிரியைக் குடையாகவெடுத்த கண்ணனைநோக்கி யிந்திர னிவ்வாறு கூறினன் ௫௬

தொடர்பின்மையணி.— இதனை வடநூலார் அசங்கதியலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும் அவற்றுள்,

க-வது—காரணமோரிடத்திருப்பக் காரிய மற்றோரிடத்துப்பிறத்தலைச்சொல்லுதல். உ-ம்.—

"வேறொரு மாதர்மேல் வேந்த னகநுதியா
லூறுதா விம்மா துயிர்வாடுங்—கூறி
னிருவரே மெய்வடிவி னேந்திழை நல்லா
ரொருவரே தம்மி லுயிர்."

இதில், ஊறுசெய்தலாகியகாரண மோரிடத்திருப்ப வாடுதலாகிய காரிய மோரிடத்துப்பிறந்தது.

"தீயனெனும் பாம்பு செவியிலொரு வற்கௌவ
மாயுமே மற்றொருவன்."

இதுவு மது.

உ-வது—ஓரிடத்திற்குரியதை மற்றோரிடத்திற் செய்தல். உ-ம்.—

"கங்கணங்கண் ணிற்றிலகங் கையிற் றரித்தனர்சீர்
தங்கிறையொன் ஞர்மடவார் தாம்."

இதில், கங்கணம்—சடகமும் நீர்த்துளியுமாம்; திலகம்—திலோதகமும் பொட்டுமாம்.

ங—வது—ஒன்றைச் செயத்தொடங்கி அதற்குப் பகையாகிய மற்றொன்றைச் செய்தல். உ-ம்.—

"கண்ணன் மயலகற்றக் காமருருக் கொண்டதனுற்
பண்ணுமயன் மாதர் பலர்க்கு." ருஎ

தகுதியின்மையணி.—இதனை வடநூலார் விஷமாலங்கார மென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க—வது—பொருந்துதற்குத் தகுதியில்லாத பொருள்களுக்குப் பொருத்தத்தைச் சொல்லுதல். உ-ம்.—

"பொன்போலுங் கள்ளிப் பொரிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாருய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு."

இதில், பேதையது மெல்லியவுருவத்திற்கும் பாலைநிலவெப்பத்திற்கும் பொருத்தஞ்சொல்லப்பட்டது.

உ—வது—ஒருகாரணத்திற் பகைக்குணமுடைய காரியம் பிறந்ததைச் சொல்லுதல். உ-ம்.—

"மருவெறுழ்நக் கொன்கரிய வாள்வெண் புகழைத்
தருமா லுலகந் தனில்."

ங—வது—ஒருகாரியத்தைச் செயத்தொடங்கி

"எலியுணவிற் றென்றாகப் பெட்டிகறித் தாயிற்
றெலியரவிற் குத்தா னுணு."

என விஷ்டத்தையடையா தநிஷ்டத்தையடைதலும்,

"பாவை யலர்க்குடைநீ பற்றுதற்கு வாரிசத்தை
வாவியில்லைவத் தன்றே வளர்க்கின்றாய்—மேவுகலி
யிவ்வுலகு செய்நன்றி யெண்ணாது நின்வதனச்
செவ்வியது வெளவல் செயம்."

என மலர்க்குடையைத் தான்பெறுதலுமது தன்முகவொளியை யபகரித்தலுமாகிய விஷ்டத்தையு மநிஷ்டத்தையு மடைதலும்,

“இலகு மதிகளங்க மேந்திழையாய் நீத்தற்
குலகிலுன தானனமா யுற்றுங்—திலகமென்பேர்
சேர்களங்க மேபெற்றான் பேதையரைச் சேர்ந்தக்கால்
யார்களங்கி யாகா ரறை.”

எனக் களங்கமொழித்தலாகிய விஷ்டத்தை யடையாமையுமாகிய விம்மூன்று வகையானும் வரும். ௩௮

தகுதியணி.—இதனை வடநூலார் சமாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது—தகுதியாகிய விரண்டுபொருள்களுக்குச் சம்பந்தத்தைச் சொல்லுதல். உ-ம்.—

“இந்தத் தாளவட மேந்திழைநின் கொங்கைகளிற்
சந்தமுறச் சேர்த றகும்.”

உ-வது—காரியத்தை யதன்காரணத்தோடொத்த செய்கையுள்ள தாகச் சொல்லுதல். உ-ம்.—

“கானந் தனிலுதித்தக் கானந் தனையழித்திட்
டேனஞ்செய் தீயினுதித்த புகை—தானு
மெழிலி யுருவாகி யீர்ம்புனலைப் பெய்தத்
தழலை யவித்த றகும்.”

௩-வது—விரும்பத்தகாததை யடையாமல் விரும்பப்பட்டதையே யடைதல். உ-ம்.—

“பொற்கொடிநீ நின்று புரிதவத்தாற் கஞ்சமலர்
சொற்கவினின் றாளுருவாய்த் தோன்றியே—நற்கதியைச்
சேர்வுற் றனவுலகிற் செய்யதவ நற்கதியைச்
சார்விக்கு மென்பதுமெய் தான்.”

இதில், நற்கதி புண்ணியலோகமு நல்லநடையுமாம்

“நந்தலுறு தீவினைசெய் யேலென்று நான்மறைதே
ரந்தணன்பல் கானன் கறைந்துமவன்—மைந்தனனி
நந்தலுறு தீவினையை நாடோறுஞ் செய்துமொரு
தந்தை யுரைகடவான் றான்.”



224683

இதில், எதிர்மறையா லநிஷ்டந்தோன்றினு மக்கினிகாரியமென்னும் பொருளா லிஷ்டமடைதலேயாம்.

"மாதர்சுவர்க் கத்துநசை வைத்தமர்செய் வேந்தடைந்தான்
மாதர்சுவர்க் கத்திலேயே மாண்டு."

இதில், அநிஷ்டந்தோன்றினுஞ் சிலேஷையா லிஷ்டமடைதலேயாம் ருகூ

வியப்பணி.—அஃதாவது, ஒரு பயனைக்கருதி யதற்குப் பகையாகிய முயற்சியைச் செய்தல். இதனை வட நூலார் விசித்திராலங்காரமென்பர். உ-ம்.—

"ஓதுந் திறத்தி லுயர்ந்தோர்க டாழ்குவ ரெப்
போதுமுயர் வெய்தற் பொருட்டு."

எனவரும். ச௦

பெருமையணி.—இதனை வடநூலார் அதிகாலங்காரமென்பர் அது இருவகைப்படும். அவற்றுள்,

க—வது—பெரியவாதாரத்தினு மாதேயத்தைப் பெரிதாகச்சொல்லுதல். உ-ம்.—

"உலக முழுதடங்கு மாவிசும்பி லுன்ற
னலகில் குணமடங்கா வாம்."

உ—வது—பெரியவாதேயத்தினு மாதாரத்தைப் பெரிதாகச்சொல்லுதல். உ-ம்.—

"மன்சீ ருலகெவ் வளவுபெரு மைத்தளவி
லுன்சீ ரடங்கி யுள." சக

சிறுமையணி.—அஃதாவது, அற்பமாகிய வாதேயத்தினு மாதாரத்தை மிக வற்பமாகச்சொல்லுதல். இதனை வடநூலார் அல்பாலங்காரமென்பர். உ-ம்.—

"விரலாழி கைவளையாய் விட்டினி யார்த்து
வரலாழிக் கென்செயுமெம் மாது."

ஆதாரம்—இடம். சஉ

ஒன்றற்கொன்றுதவியணி.— அஃதாவது, ஒன்றற்கொன்றுபகரித்தலைச்சொல்லுதலாம், இதனை வடநூலார் அந்நியோந்நியாலங்காரமென்பர், உ-ம்.—

"திங்களிர வால்விளங்குஞ் செப்புகதிர்த் திங்களாற்
கங்குல் விளங்குமே காண்."

எனவரும். ௪௩

சிறப்புநிலையணி.—இதனை வடநூலார் விசேஷாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது—பிரசித்தமாகிய வாதாரமில்லாதிருப்ப வாதேயத்தினிருப்பைச் சொல்லுதல். உ-ம்.—

"தினகரனில் லாமலவன் செய்ய கதிர்க
ளினிதிலங்குந் தீபத் திருந்து."

உ-வது—ஒருபொருளைப் பலவிடங்களிலிருப்பதாகச் சொல்லுதல். உ-ம்.—

"ஆயிழை நல்லா ளகம்புறமுன் பின்னெங்கு
மேயவெனக் குத்தோன்று மே."

௩-வது—அற்பகாரியஞ் செயத்தொடங்கியதனால் அருமையாகிய மற்றொருகாரியமுமெய்தல். உ-ம்.—

"மாட்சியினிற் காண்பேற்கு வள்ளலே கற்பகநற்
காட்சியுங்கிட் டிற்றெளிது காண்." ௪௪

மற்றதற்காக்கலணி.—இதனை வடநூலார் வியாகாதாலங்காரமென்பர். இது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது—ஒருகாரியத்தின துலகறிகாரணத்தை பொருவனதற்குப் பகையாகியகாரியத்திற்குக் காரணமாக்குதல். உ-ம்.

"உலகை மகிழ்விக்கு முயர்மலர்கொண் டேவே
ளுலகை வருத்து முடன்று."

உ-வது—ஒருவனொருகாரியத்திற்குச் சாதனமாகக் கொண்ட பொருளை மற்றொருவனதற்குப்பகையாகியகாரியத்திற்குச் சாதனமாகக் கொள்ளுதல். உ-ம்.—

"கண்ணுற் கொலப்பட்ட காமனையிக் காரிகையார்
கண்ணாலுய் விக்கின்றார் காண்."

௩-வது—ஒருகாரியத்தையுண்டாக்குதற் கொருவரா லுட்கொளப் பட்டபொருளான் மற்றொருவ ரதன்பகைக்காரியத்தை நன்றாகச்சமர்த் தித்தல். உ-ம்.—

"உலுத்தன் மிடிவருமென் றுள்வெருவி நல்கா
னிலத்தென் றொருவ னிகழ்த்த—நலத்திசைகூர்
வள்ளலுமவ் வச்ச மருவியே நல்குமென
விள்ளலுற்றான் மற்றொருவன் மெய்." ௬௫

காரணமாலையணி.—அஃதாவது, பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாகவருவனவற்றைக் காரணங்களாகவேனுங் காரியங்களாக வேனுஞ் சொல்லுதல். உ-ம்.—

"நீதியாற் செல்வ நிகழ்செல்வத் தாற்கொடைமற்
றேதுகொடை யாற்சீ ருள."

இதில், நீதிமுதலியன செல்வமுதலியவற்றிற்குக் காரணமாதல் காண்க.

"படர்நரகம் பாவத்தாற் பாவ மிடியான்
மிடியீவி லாமையினா மே."

இதில், நரகமுதலியன பாவமுதலியவற்றிற்குக் காரியமாதல்காண்க. ௬௬

ஒற்றைமணிமாலையணி.—அஃதாவது, பின்பின்னாக வருவனவற் றிற்கு முன்முன்னாகவருவனவற்றை விசேஷியங்களாகவேனும் விசேஷ ணங்களாகவேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் ஏகாவளியலங் காரமென்பர். உ-ம்.—

"மன்னிவன்கண் காதளவுங் காதுதோண் மட்டியையுந்
துன்னுறுதோள் சானுத் தொடும்."

இதில், கண்முதலியன விசேஷியம்.

"நிறைவெளியு மதிலியங்கு தினகரனு மவன்கதிர்சேர் நிலவு மன்னோன்
குறைவில்பிறப் பிடமாய புனலுமத னதுபித்தக் கூறாந் தீயு
மறைநெறியி னதனிலவி வழங்குபுரு டனுமவற்குப் பிராண னாகி
யுறைவளியு மதுகொண்மண முறுநிலனு மாமிறையெட் டுருவுட் கொள்வாம்."

இதில், வெளிமுதலியன விசேஷணம். ௬௭

மாலைவிளக்கணி.—அஃதாவது, தீபகத்தையு மேகாவளியையுஞ் சேர்த்துச்சொல்லுதலாம். இதனை வடநூலார் மாலாதீபகாலங்கார மென்பர். உ-ம்.—

"மனைக்கு விளக்க மடவாண் மடவா
டனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புலவர்க்குக் கல்வியே கல்விதனக்
கோதிற் புகழ்சா லுணர்வு."

இதில், எல்லா வாக்கியங்களுக்கும் விளக்கமென்னு மொருசொன் முடிபாய் வருதலாற் றீபகவிதியும், மடவாண் முதலியவற்றை முன் முன்னாகவரு மனைமுதலியவற்றிற்கு விசேஷியங்களாகச் சொல்லுவதால் ஏகாவளிவிதியும் வந்தன. ௪௮

மேன்மேலுயர்ச்சியணி.—அஃதாவது, மேன்மேலு மொன்றற் கொன்றுயர்குணத்தாலேனு மிழிகுணத்தாலேனு முயர்வாதலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் சாராலங்காரமென்பர். உ-ம்.—

"தேன்மதுர மாமதனிற் றெள்ளமுத மேமதுர
மான்சொலதி னும்மதுர மாம்."

இது உயர்வு.

"நீரினு நண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந்—தேரி
னிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து."

இது இழிவு. ௪௯

நிரனிறையணி.—அஃதாவது, வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவைகளை யம்முறையே சொல்லுதலாம். இதனை வடநூலார் யதாசங்கியாலங்காரமென்பர். உ-ம்.—

"தரியலர்க்குந் தன்னிற் பிரியலர்க்கு மெங்கோன்
றெரிதுன்பு மின்புஞ் செயும்."

எனவரும். ௫0

முறைபிற்படர்ச்சியணி.—அஃதாவது, முறைபாகவொருபொருள் பலவிடங்களிற்சென்றடைதலையேனு மோரிடத்திற் பலபொருள்சென் றடைதலையேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரியாயாலங்கார மென்பர். உ-ம்.—

"நஞ்சமே நீபண்டை நாளி னதிபதிதன்
னெஞ்சிலிருந் தாங்கதன்பி னீங்கியே—செஞ்சடிலச்
சங்கரனார் கந்தரத்திற் சார்ந்திக் கொடியோன்வாய்த்
தங்குதியிக் காலந் தனில்."

எனவும்,

"முன்னா ளிருவர்க்கும் யாக்கையொன் றாக முயங்கினம்யாம்
பின்னாட் பிரியன் பிரியையென் றாயினம் பேசலுறு
மின்னாட் கணவன் மனைவியென் றாயின மெண்ணினினிச்
சின்னாளி லெப்படி யோமன்ன நீயிங்குச் செப்புகவே."

எனவும் வரும். முறையேகாண்க. ருக

மாற்றுநிலையணி.—அஃதாவது, இழிவாகியபொருளைக்கொடுத் துயர்வாகியபொருளைவாங்குதலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிவிர்த்தியலங்காரமென்பர். உ-ம்.—

"சடாயு கிழவுடம்பைத் தான்கொடுத்துப் பெற்றான்
கெடாததொரு கீர்த்தி யுடம்பு." ருஉ

ஒழித்துக்காட்டணி.—அஃதாவது, ஒருபொருளை யோரிடத் தில்லையென வொழித்து மற்றோரிடத் துண்டென்று நியமித்தலாம். இதனை வடநூலார் பரிசங்கியாலங்காரமென்பர். உ-ம்.—

"சிறைபடுவ புட்குலமே யன்றிநின் றேயத்
திறைவமக் கட்கு ளிலை."

எனவரும்.

"சிந்துநீகர் தானையாய் தீத்தொழிலைச் செய்வோர்க
ளந்தணரே நின்னாட் டகத்து."

இதில், ஒழிப்புச்சொல்லானது தொக்குநின்றது. ருங

உறழ்ச்சியணி.—அஃதாவது, சமானமாகிய வலிமையையுடைய விரண்டுபக்ஷங்களைக்காட்டி விகற்பித்தலாம். இதனை வடநூலார் விகல்பாலங்காரமென்பர். உ-ம்.—

"தலையையே னும்விரைந்தெந் தார்வேந்தர்க் கோர்நின்
சிலையையே னும்வளைத்தல் செய்." ருச

கூட்டவணி.—இதனை வடநூலார் சமுச்சயாலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

௧-வது—பகையில்லாமையா லொருகாலத்திற் கூடத்தக்கபொருள்களுக்குக் கூட்டத்தைச்சொல்லுதல். உ-ம்.—

"நின்சீ ருருவு வெளிப்படுத ஞெக்கி நோக்கி நிலைதளரு
மென்பூ டுருக விளமுலைமேற் புல்லு முனிந்தா யெனவருந்து
மன்போ டேடீ ர்த்தனன்போ னகைக்கு மகன்று யெனவெளியிற்
பின்போ தருநல் லுணர்விழந்த பித்தர்போலப் பேதுறுமால்."

இதில், நிலைதளர்தல், புல்லல், வருந்தல், நகைத்தல் முதலிய கூடின.

௨-வது—பலகாரணங்கள் கூடுதலா லொருகாரியம் பிறத்தல். உ.ம்-

"குலமு முருவுங் குணமுந் திருவு
நலமுமுயர் கல்வி நயமும்—வலமுஞ்
செருக்கைவிளைக் கின்றனவிச் செம்மற்கு நாளுந்
திருக்கறுநன் மாண்பிற் செறிந்து." ௫௫

வினைமுதல்விளக்கணி.—அஃதாவது, ஒருகர்த்தாவைச்சேர்ந்த முறையுள்ள பலசெய்கைகளை முறைபிறழாமற்சொல்லுதலாம். இதனை வடநூலார் காரகதீபாலங்காரமென்பர். உ-ம்.—

"துயில்கின்றான் வாசநீர் தோய்கின்றான் பூசை
பயில்கின்றான் பல்சுவைய வுண்டி—யயில்கின்றான்
காவலனென் றேங்குகுடை காப்பவராற் றன்னுணுயிப்
பாவலரைப் பொன்னேகண் பார்."

எனவரும். ௫௬

எளிதின்முடிபணி.—அஃதாவது, ஒருவன் செயத்தொடங்கிய காரிய மற்றொருகாரணவுதவியா லெளிதின்முடிதலாம். இதனை வடநூலார் சமாதியலங்காரமென்பர். உ-ம்.—

"மதிநுதலாட் கியானூடன் மாற்றத் தொழும்போ
துதவிமுகில் செய்தன் றொலித்து." ௫௭

விறல்கோளணி.—அஃதாவது, வலியுடையபகையின்மேலாதல் அதனது துணையின்மேலாதல் பராக்கிரமித்தலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரத்தியநீகாலங்கார மென்பர். உ-ம்.—

"வண்டினங்கே ளூட்டுமரை வாட்டலிற்சீற் றங்கொடுபோய்த்
தண்டுதிங் கட்குக் களங்கு."

இது பகை.

"தாக்குவிழிக் குத்துணையாய்ச் சார்ந்திலங்கு காதைக்கீ
ழாக்கிநின்ற நீலத் தலர்."

இது பகைத்துணை. ௫௮

தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணி.—அஃதாவது, ஒரு பொருளைச்சொல்லத் தண்டாபூபிகாநியாயத்தினான் மற்றொருபொருடோன்றுதலாம். தண்டாபூபிகாநியாயமாவது தண்டமபகரிக்கப்படுதலினாலதனிற் சேர்த்துவைத்த அப்பமுதலிய வுணவபகரிக்கப்படுதலுந் தானேவிளங்கல். இதனை வடநூலார் காவியார்த்தாபத்தியலங்காரமென்பர். உ-ம்.—

"மங்கைமுகந் திங்களையே வாட்டிற் றறைகுவதென்
பங்கயமென் போதுபடும் பாடு."

எனவரும். ௫௯

தொடர்நிலைச்செய்யுட்குறியணி.—அஃதாவது, சாதிக்கத்தக்க பொருளை வாக்கியார்த்தத்தினாலாயினும் பதார்த்தத்தினாலாயினு மவ்விரண்டினாலுமாயினுஞ் சாதித்தலாம். இதனை வடநூலார் காவியலிங்காலங்காரமென்பர். உ-ம்.

"காம நினைவென்றேன் கண்ணுதலோ னென்மனத்தின்
மீமருவு கின்றான் விடாது."

இதில், பின்வாக்கியார்த்தத்தைக்கொண்டு வெல்லுதல் சாதிக்கப்பட்டது. இது வாக்கியப்பொருட் செய்யுட்குறி.

"மிளிர்நீறே யீசன் விழிமணியே வாழி
தெளியுமையான் மீதணியுஞ் சீரா—லுளதாய
வின்புமொளி யைக்கவர்வீ டென்னுமோ கத்தழுந்தற்
கன்பினேன் செல்வே னமைந்து."

இதில், வீடடைதலை மோகமாகச்சொல்லுத லப்பிரசித்தமாகையாலது சுகவொளியை யபகரித்தலென்னும் பதார்த்தத்தினாற் சாதிக்கப்பட்டது. இது பதப்பொருட்செய்யுட்குறி.

"கலைதேர் புலமைநிறை காரிகையா லோர்தன்
றலைமேற்கோட் பட்டதெக்கே சஞ்சீர்—நிலையதற்குப்
பேசவிலங் காங்கவரி பின்புறங்கொள் சாமரையை
யேசுநயார் சொல்வா ரினை."

இதில், புலமையிற்சிறந்தகாரிகையாற் சிரமேற்கொளப்பட்ட தேக்கேசமென்னும் வாக்கியார்த்தமும் விலங்கு பின்புறங்கொண்டவென்னும் பதார்த்தமுஞ்சேர்ந்து காரிகைகூந்தற்குச் சாமரை யொப்பாகாமை சாதிக்கப்பட்டது. இது இருமைச்செய்யுட்குறி. ௬0

வேற்றுப்பொருள்வைப்பணி.— அஃதாவது, பொதுப்பொருளாற் சிறப்புப்பொருளையுஞ் சிறப்புப்பொருளாற் பொதுப்பொருளையுஞ் சாதித்தலாம். இதனை வடநூலார் அர்த்தாந்தரநியாசாலங்காரமென்பர். உ-ம்.—

"நிறைவாரி யைத்தாண்டி நின்றா னனும
னறைபெரியோர்க் கென்னோ வரிது."

இதில், பெரியோர்க்கரிதில்லையென்னும் பொதுப்பொருளால் அநுமன் கடலைத் தாண்டிநின்றானென்னும் வர்ணியமாகிய சிறப்புப்பொருள் சாதிக்கப்பட்டது.

"ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து."

இதில், முன்னிரண்டடியிற் சொல்லப்பட்ட சிறப்புப்பொருளாற் பின்னிரண்டடியாலுஞ்சொல்லப்பட்ட வர்ணியமாகிய பொதுப்பொருள் சாதிக்கப்பட்டது.

"தாழ்ந்தோ ருயர்வ ரென்றுமிக வுயர்ந்தோர் தாழ்வ ரென்றுமறஞ்
சூழ்ந்தோ ருரைக்கு முறைகண்டா மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோ ரனந்தன் மணிமுடிமே னின்றன் றுயர்ந்து தடவரைடைச்
சூழ்ந்தோர் வரையி னுதிடபவன்றாட் கீழ்கின் றதுபோய்ச் சூழெயிலே."

இதில், பின்சொல்லப்பட்ட வர்ணியமாகிய சிறப்புப்பொருளான் முன்சொல்லப்பட்ட அவர்ணியமாகிய பொதுப்பொருள் சாதிக்கப்பட்டது. பிறவுமன்ன. ௬௧

மலர்ச்சியணி.— அஃதாவது, சிறப்புப்பொருளைச் சாதித்தற்குப் பொதுப்பொருளையும் மீட்டுமப் பொதுப்பொருளைச்சாதித்தற்கு மற்றொரு சிறப்புப்பொருளையுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் விகஸ்வராலங்கார மென்பர். உ-ம்.—

"தேடு மணிபலவுஞ் சேரிமய மால்வரைக்குக்
கூடுபனி யாலோர் குறைவுண்டோ—நீடுபல
வின்குணத்திற் குற்றமொன் றிந்து பலகதிரிற்
புன்களங்கம் போலடங்கிப் போம்."

இதில், முன்னிரண்டடியிலுஞ்சொல்லிய சிறப்புப்பொருளைச் சாதிக்கப் பலகுணங்களி லொருகுற்ற மறையுமென்னும் பொதுப்பொருளைச் சொல்லி அதைச் சாதித்தற்குச் சந்திரகிரணங்களிற் களங்கம்போலென்னுஞ் சிறப்புப்பொருள் கூறப்பட்டது. ௬௨

கற்றோர்நவிற்சியணி—அஃதாவது, மிகுதிக்குக்காரணமாகாததை அதற்குக் காரணமாகச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரௌடோக்தியாலங்காரமென்பா. உ-ம்.—

"தக்கவிவள் கண்யமுனை தன்னி லலர்குவளை
யொக்குங் கருமை யுள."

இதில், குவளையின்கருமைமிகுதிக்கேதுவாகாத யமுனையிற்பிறத்தலேதுவாகச் சொல்லப்பட்டது.

"ஐந்தாரு வின்மலர்த்தா தங்காம தேனுவின்பால்
சிந்தா மணியொளி சேர்த்தனத—னந்தா
வுயிர்ப்பிஙெடு சங்கநிதி யுள்வெளியைந் தாலும்
வியப்பவிவற் றந்தான் விதி."

இதுவு மது. ௬௩

உய்த்துணர்வணி.—அஃதாவது, இக்காரிய முற்றுப்பெறும்; இஃதிவ்வாறுமெனி னென வூகித்தலாம். இதனை வடநூலார் சம்பாவனாலங்கார மென்பர். உ-ம்.—

"சேடுறுநங் கோன்புகழைச் சேடனவி லத்தொடங்கிற்
பீடுறவே முற்றுப் பெறும்." ௬௪

பொய்த்தற்குறிப்பணி.—அஃதாவது, ஒருபொருளைப் பொய்யாக்குதற்கு மற்றொருபொய்ப்பொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார் மித்தியாத்தியவசதியலங்காரமென்பர். உ-ம்.—

"வான்பசுந்தோல் போற்சுருட்ட வல்லோன் பசுபதியைத்
தான்பரவா தெய்துறூஉம் வீடு."

"விண்மலர்த்தார் வேய்ந்தோனே வேசையரைத் தன்வசமாப்
பண்ணுதற்கு வல்லனென் பார்."

எனவரும். ௬௫

வனப்புநிலையணி.—அஃதாவது, வர்ணியத்தை விசேஷியமாக்கிக் கொண்டு வர்ணிக்கவேண்டிய வாக்கியார்த்தத்திற்கொப்பாகிய மற்றொரு வாக்கியார்த்தத்தை வர்ணித்தலாம். இதனை வடநூலார் லலிதாலங்கார மென்பர். உ-ம்.—

"பெருகறன்முற் றம்போன பின்கரைகோ லற்கித்
திருவனையாள் வேட்டல் செயும்."

இதில், சிறிதன்போடுவந்த நாயகனையிகழ்ந்து மற்றொருத்தியிடத்திலவன்போனபின்பு தன்னைத் தூதுவிடவிரும்பிய நாயகியைக் குறித்துத் தூதி தான்சொல்லல்வேண்டியதற்கொத்த நீர்போயபின்கரைகோலல் கூறினாள். ௬௬

இன்பவணி.—இதனை வடநூலார் பிரஹர்ஷணாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது—முயற்சியின்றி விரும்பப்பட்ட காரியஞ்சித்தித்தல். உ-ம்.—

"தன்னு யகன்விழைந்த தையலையே தூதாக
வன்னான்க ணுய்த்தா ளணங்கு."

உ—வது—விரும்பப்பட்ட பொருளினு மதிகமாகியபொருள் சித்தித்தல். உ-ம்.—

"மழுங்குவிளக் கைத்தூண்ட மங்கையெழும் போது
செழுங்கதிர்தோன் றிற்றிருள்கால் சீத்து."

௩—வது—உபாயஞ் சித்தித்தற்பொருட்டுச் செய்யுமுயற்சியாற் பலமே சித்தித்தல். உ-ம்.—

"தங்கு நிதியஞ் சனமூ லிகையகழ்ந்தோ
னங்குநிதி யேகண்டா னன்று." ௬௭

துன்பவணி.—அஃதாவது, விரும்பப்பட்ட பொருளைக்குறித்து முயற்சிசெய்ப வதற்குப் பகைப்பொருள் கிடைத்தலாம். இதனை வடநூலார் விஷாதனாலங்காரமென்பர். உ-ம்.—

"சோருஞ் சுடர்விளக்கைத் தூண்டு கையிலவிந்த
தாருமிடர் கூர வகத்து." சுஅ

அகமலர்ச்சியணி.—அஃதாவது, ஒன்றன் குணகுற்றங்களான் மற்றொன்றற்கு அவையுளவாதலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் உல்லேகாலங்காரமென்பர். அது நான்குவகைப்படும். அவற்றுள்,

க-வது—குணத்தினாற் குணத்தைச்சொல்லுதல். உ-ம்.—

"இக்கற் பினண்மூழ்கித் தூய்மைசெயு மோவெனையென்
றக்கங்கை கொள்ளு மவா."

இதில், கற்பினள்பெருமைக்குணத்தாற் கங்கைக்குப் பரிசுத்த குணஞ் சொல்லப்பட்டது.

உ-வது—குற்றத்தினாற் குற்றத்தைச்சொல்லுதல். உ-ம்.—

"சினக்கதிர்வேல் வேந்தேநின் றெவ்வர் மடவார்
வனத்திலடைந் தோடுங்கான் மாழ்கித்—தனத்திலுற
வைத்தபெருந் திட்பமடி வையாத நான்முகனை
மைத்தவிழி நீருகவை வார்."

இதில், பாதங்களின் மென்மைக்குற்றத்தால் வீணாக முலைகளிற் கடினத்தைவைத்த நான்முகனிந்தை கூறப்பட்டது.

ங-வது—குணத்தினாற் குற்றத்தைச்சொல்லுதல். உ-ம்.—

"நாளுத் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீளுப் நிலத்து விளியரோ—வேளுய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து."

இதில், நல்லோர்பெருமைக்குணத்தாற் றிருமகளுக்கு அவரை யடையாமைக் குற்றங் கூறப்பட்டது.

ச-வது—குற்றத்தினாற் குணத்தைச் சொல்லுதல். உ-ம்.—

"கோவடுவேற் கொற்றவநீ கொல்லாமை விட்டதுவே
சேவகர்க்குப் பேறு தியம்."

இதில், அரசன் கொடுமைக்குற்றத்தினாற் கொலையின்றிப் புறம்போதற்குணஞ் சொல்லப்பட்டது. சுசு

இகழ்ச்சியணி.—அஃதாவது, ஒன்றன்குணகுற்றங்களான் மற்றொன்றற்கு அவையுளவாகாமையைச் சொல்லுதலாம். இதனைவடநூலார் அவக்ஞியாலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

க-வது—குணத்தினாற் குணமுண்டாகாமை. உ-ம்.—

"ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி."

இதில், கடலின் பெருமைக்குணத்தா னாழிக்கு அதிகநீர் கொள்ளலாகிய குணமுண்டாகாமை கூறப்பட்டது.

உ-வது—குற்றத்தாற் குற்றமுண்டாகாமை. உ-ம்.—

"கமலமலர் தற்கண்டு கூம்புதலாற் காம
ரமுதகிர ணற்கென் குறைவு."

இதில், கமலங்கூம்புதற்குற்றத்தாற் சந்திரனுக்குக் குறைவாகிய குற்றமுண்டாகாமை கூறப்பட்டது. ௭௦

வேண்டலணி.—அஃதாவது, குற்றத்தாற் குணமுண்டாதலைக் கண்டு அக்குற்றத்தைப் பிரார்த்தித்தலாம். இதனை வடநூலார் அநுக்ஞியாலங்காரமென்பர். உ-ம்.—

"வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு விருந்துசெய் துறுபெரு மிடியுங்
கொண்டநல் விரதத் திளைக்கும்யாக் கையுநீ கொடியனேற் கருளுநா ளுளதோ."

இலேசவணி.—அஃதாவது, குற்றத்தைக் குணமாகவுங் குணத்தைக் குற்றமாகவுஞ் சொல்லுதலாம். உ-ம்.—

"பறவைக ளெலாமனப் படியே திரிதாக்
குறைவிலிக் கிளிக்குக் கூட்டுச்
சிறைநீங் கிளவியிற் சேர்பய னமே."

இது, அரசனுக்கினியனாய்த் தன்னினீங்கி அவன்புறத்து நெடுநாளாகவிருக்குங் கல்விசான்றபுதல்வனைப் பார்த்தற்குவிரும்பியதந்தையாற் சொல்லப்பட்டது. இதில், மதுரச்சொல்லாகிய குணம் பஞ்சரச்சிறைக்குக் காரணமாகையாற் குற்றமாகவும், மதுரச்சொல்லில்லாமையாகிய குற்றம் வேண்டியவாறுதிரிதற்குக் காரணமாகையாற் குணமாகவுஞ் சொல்லப்பட்டன. ௭௨

குறிநிலையணி.—அஃதாவது, புகழ்பொருளையுணர்த்துஞ் சொற்களாற் குறித்தறிதற்குத் தகுதியாகிய பொருளைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் முத்திராலங்காரமென்பர். உ-ம்.—

"மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவநீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்
சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திக்கொளினு
நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே."

இதில், சிந்தாமணி முதலிய நூல்கள் குறிக்கப்பட்டன. ௭௩

ரத்னமாலையணி.—அஃதாவது, சொல்லத்தொடங்கிய பொருள்களை முன்பின் முறைவழுவாதுவரச் சொல்லுதலாம். இதனை வடநூலார் ரத்நாவளியலங்காரமென்பர். உ-ம்.—

"உனதுபிர தாப மூபிரிழந்த தெவ்வர்
மனைவியரா னேருறுப்பின் மண்ணுஞ்—சினவிழிபி
னூமுவெஞ் சிற்றீடு நாசியிற்காலும் மறிவி
னூம் வெளிபுருவு மாம்."

இதில், பஞ்சபூதங்களு முறைபிறழாமற் சொல்லப்பட்டன. ௭௪

பிறிதின்குணம்பெறலணி.—அஃதாவது, ஒருபொருளானது தன் குணத்தைவிடுத்து பிறிதொன்றின் குணத்தைக் கவர்தலாம். இதனை வடநூலார் தத்குணாலங்காரமென்பர். உ-ம்.—

"இவண்மூக் கணிமுத் திதழொளியாற் பெற்ற
துவண்பதும ராகத் தொளி."

இங்கே, குணம்-சுவையொளி யூறோசைநாற்ற முதலியன ௭௫

தொல்லுருப்பெறலணி.—இதனை வடநூலார் பூர்வரூபாலங்காரமென்பர். அது இருவகைப்படும் அவற்றுள்,

க-வது—ஒன்று மற்றொன்றன் குணத்தையடைந்திருந்து மீட்டுந் தன்குணத்தையே யடைதலாம். உ-ம்.—

"சித்தன் களக்கறையா னீலுருக்கொள் சேடனுஞ்சீ
ருற்றடைந்தான் றன்முன் னுரு." ௭௬

உ-வது—ஒருபொருள் விகாரத்தையடைந்தபோதிலும் பூர்வதிசையைச் சொல்லுதலாம். உ-ம்.—

"வளியால் விளக்கவிந்து மாதுளத்தி ஞண
மொளிமே கலைசெயலா லுண்டு." எனவரும்.

பிறிதின்குணம்பெறுமையணி.—அஃதாவது, ஒருபொருளானது தன்னோடு சம்பந்தித்த பிறிதொன்றன்குண மடையாமையாம். இதனை வடநூலார் அதத்குணாலங்காரமென்பர். உ-ம்.—

"புனைகழற்கா னங்கோன் புகழ்திசைவே ழங்க
ணனைமதத்திற் றோய்ந்து நயவார்—மனைவியர்வாட்
கண்மை யறத்துடைத்துங் காமர் மதிபோல
வெண்மையுடைத் தாய்விளங்கு மே."

புகழ்கரிதாகாமை காண்க. எஎ

தன்குணமிகையணி.—அஃதாவது, மற்றொன்றன்சார்பினாலேதன தியற்கைக்குண மிகுதலாம். இதனை வடநூலார் அநுகுணாலங்கார மென்பர். உ-ம்.—

"வார்செவிசேர் காவிமலர் மானனையாய் நின்கடைக்கட்
பார்வையினான் மிக்ககரும் பண்பு."

இதில், கடைக்கட்பார்வையின் சார்பினாற் குவளையின்கருமைக்கு மிகுதல்சொல்லப்பட்டது. எஅ

மறைவணி.—அஃதாவது, பொதுக்குணத்தினா லிரண்டுபொருள் களுக்கு வேற்றுமைதோன்றாமையாம். இதனை வடநூலார் மீலிதாலங் காரமென்பர். உ-ம்.—

"பேதமுறத் தோன்றாதிப் பேதையியற் கைச்சிவப்பார்
பாதமுற ஆட்டியசெம் பஞ்சு." எக

பொதுமையணி.—அஃதாவது, ஒப்புமையா லிரண்டுபொருள்க ளுக்கு விசேஷந் தோன்றாமையாம். இதனை வடநூலார் சாமானியாலங் காரமென்பர். உ-ம்.—

"வண்பதும வாவி யடைந்தமட வார்வதனம்
பண்பி னறியப் படா." அ0

மறையாமையணி.—அஃதாவது, பொதுக்குணத்தினாலொற்றுமை யுடைய விரண்டுபொருள்களுக் கொருகாரணத்தால் வேற்றுமைதோன் றுதலாம். இதனை வடநூலார் உந்மீலிதாலங்காரமென்பர். உ-ம்.—

"ஒழுகுறு மருவி யீட்ட மொலியின னகுவெண் டிங்கள்
பழகுறு மூடற்க ளங்காற் பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழகளி றமிழ்ம தத்தான் மலர்மிசைக் கடவு ளூர்தி
யழகுறு நடையா லன்றி யறிதாப் படாவக் குன்றில்."

இது கைலாசவர்ணனை. ௮௧

சிறப்பணி.— அஃதாவது, ஒப்புமையாற் பொதுமையுற்றிருந்த விரண்டுபொருள்களுக் கொருகாரணத்தால் விசேஷந் தோன்றுதலாம். இதனை வடநூலார் விசேஷாலங்காரமென்பர். உ-ம்.—

"விதுவெழலுஞ் சோர்வுறலான் மின்னார் முகத்திற்
பதுமமலர் வேறு படும்." ௮௨

இறையணி.—இதனை வடநூலார் உத்தராலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

௧-வது— மறைப்பிறை. இது, ஓரபிப்பிராயத்தைத் தன்னுண் மறைத்து வைத்துக்கொண்டிருக்கின்ற வுத்தரத்தைச் சொல்லுதலாம். உ-ம்.—

"மாயையை யகன்று நடக்கக்கா லெழுமோ வாயிடை மாற்றமொன் றுண்டோ
போயொரு விடய முணர்மனம் வருமோ பெருந்துறு பகலிர வுளவோ
காயமு முயிருங் கலந்துவாழ் வுறுமோ கண்டன மெனவெனை யொருவர்
நீயறி வுறவிங் குரைப்பவ ருளரோ நேரிழா யென்றன னிமலன்."

மாயைபிரி வப்பெயரினள் பிரிவுண் மறைந்து.

௨-வது—வியப்பிறை. இது, ஒருவினாவிற்கு அதனையே விடையாகவும், பலவினாக்களுக்கு ஒன்றேவிடையாகவுஞ்சொல்லுதலாம். உ-ம்.—

'என்பணிபூண்டானிறைவன்' இதில், என்பணி-யாதுபூணெனவினாவும், எலும்புப்பூணெனவிடையுமாம்.

"மாதவன்கைக் கொள்வதெது மந்திரமீ சற்கேது
காதலுறு மஞ்சக் கரம்." ௮௩

நுட்பவணி.—அஃதாவது, பிறர்கருத்தையறிந்துகொண்டு கருத்தோடு கூடியசெய்கையா லெதிர்மொழிகொடுத்தலாம். இதனை வடநூலார் சூக்ஷ்மாலங்காரமென்பர். உ-ம்.—

"காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததாற்
பேதைய ராயம் பிரியாத—மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு."

இதில், மாதர்கூட்டத்திலிருக்கின்ற தலைவி தலைவன்கருத்தை யறிந்து தன்செய்கையா லிரவிடைவருகவென்று சொல்லியது காண்க. ()

காவுவெளிப்படுப்பணி.—அஃதாவது, ஒருவரதுமறைத்தசெய்கையை அதனைத்தானறிந்த கருத்தோடுகூடிய தன்செய்கையால் வெளிப்படுத்தலாம். இதனை வடநூலார் பிகிதாலங்காரமென்பர். உ-ம்.—

"கடிமனைக்குக் காலைவரு காவலற்குத் துஞ்சும்
படிவிரித்தா ளோரணங்கு பாய்."

இதில், காலையி லமளிவிரித்தலாலிராமுழுதும் பரத்தையரில்லிற் கண்டுஞ்சாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

வஞ்சநவிற்சியணி.—அஃதாவது, ஒருகாரணத்தா னிகழ்ந்த சத்துவமாகிய குணத்தை மற்றொரு காரணங்கூறி மறைத்தலாம். இதனை வடநூலார் வியாஜோக்தியலங்காரமென்பர். சத்துவமென்பன — கண்ணீர்வாரல், புளகரும்பல், வியர்த்தல், நகைதோன்றன்முதலியவாம். உ-ம்.—

"கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லுவராற்
பொங்கும் படைப்பரப்பின் மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தன வென்று."

இதில், சோழனைக்கண்ட மங்கையர் தாங்கொண்டமையலானுளதாகிய கண்ணீர்வார்தலைச் சேனைபாகத்தாலுளதாயதெனத் தோழியர்க்கு மறைத்தது காண்க. அசு

குறிப்புநவிற்சியணி.—அஃதாவது, ஒருபொருளைக் குறித்துச் சொல்லவேண்டியதை மற்றொருபொருளைக்குறித்துச் சொல்லுதலாம். இதனை வடநூலார் கூடோக்தியலங்காரமென்பர். உ-ம்.—

"பிறன்புலத்தில் வாய்நயச்சொல் பெட்புடன்கொள் காளா
பிறைநுதலாளை இன்றனன்விட் டேகு."

இது, மறைவிடத்திற் பிறன்மனையாள்வாய்ச்சொல்லைக் கேளாநிற்கும் விடனைக்குறித்துச் சொல்லவேண்டியதைப் பிறன்விளைநிலத்தினெல்லைமேய்கின்ற வெருதைக்குறித்துச் சொல்லியது காண்க. சொல்-நெல்லு மொழியுமாம். அஎ

வெளிப்படைநவிற்சியணி.—அஃதாவது, சிலேஷையான் மறைத்த பொருளைப் புலவன் வெளிப்படுத்தலாம். இதனை வடநூலார் விவிர்தோக்தியலங்காரமென்பர். உ-ம்.—

"பிறன்புலத்தில் வாய்நயச்சொல் பெட்புடன்கொள்காளா
யிறைவனடை கின்றனன்விட் டேகு—துறையிதெனப்
பண்பி னுணரப் பகர்ந்தான் குறிப்பாக
நண்பினுயர் பாங்க னயந்து." அஅ

யுத்தியணி.—அஃதாவது, தனதுமர்மத்தை மறைத்தற்பொருட்டுச் செய்கையாற் பிறரை வஞ்சித்தலாம். உ-ம்.—

"மாணிழையா ளன்பன் வடிவைப் படத்தெழுதும்
பாணியிலங் கோர்சிலர்தன் பாங்குற—நாணிமுகங்
கோட்டினுள் சித்திரித்த கோலவுரு வின்கரத்திற்
றீட்டினுள் கன்னற் சிலை."

இதில், தன்கணவனுருவைக் கருப்புவில்லெழுதி வேறுபடுத்திப் பிறரைவஞ்சித்தது காண்க. பாணி—காலம். அகூ

உலகவழக்குநவிற்சியணி.—அஃதாவது, உலகவழக்கச்சொல்லைத் தழுவிக்கொண்டு சொல்லுதலாம். இதனை வடநூலார் லோகோக்தியலங்காரமென்பர். உ-ம்.—

"அண்ணனீ பேசாதைந் தாறுமா தம்வரையிற்
கண்ணைமூ டிக்கொண் டிரு." கூ0

வல்லோர்நவிற்சியணி.—அஃதாவது, அவ்வுலகவழக்கச்சொல்லே மற்றொருபொருளை யுட்கொண்டிருத்தலாம். இதனை வடநூலார் சேகோக்தியலங்கார மென்பர். உ-ம்.—

"பரிமலர்ப்பூங் குஞ்சியாய் பாம்பேபாம் பின்கா
லறியுமல கத்தேன் றறி."

இதில், ஒருவன் மற்றொருவன்செய்தியைத் தன்னைக்கேட்க அவன் சமீபத்திலிருக்கின்றவனைக் காட்டி யிவனுக்கே அது தெரியுமென்று சொல்லுங்கருத்தை யுட்கொண்டிருத்தல் காண்க. சூக

மடங்குதனவிற்சியணி.— அஃதாவது, ஒருவரொருபொருளையறிவுறுத்தற்குச் சொல்லியசொல்லுக்கு மற்றொருவன் சிலேஷையினுலாதல் எடுத்தல் படுத்தல் முதலிய விசைவிகாரத்தினுலாதல் மற்றொருபொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார் வக்ரோக்தியலங்கார மென்பர். உ-ம்.—

"என்பிழைநெஞ் சிற்பொறுமென் றேதவர சென்பிழைசே
மன்பொறுக்கு நெஞ்சிலென்றாண் மாது." சூஉ

தன்மைநவிற்சியணி.—அஃதாவது, சாதிசுபாவதருமத்தையாவது தொழிற்சுபாவதருமத்தையாவது சொல்லுதலாம். இதனை வடநூலார் சுபாவோக்தியலங்கார மென்பர். உ-ம்.—

"அப்பூருஞ் செஞ்சடைமே லம்புலியைப் பார்த்துப்பார்த்
தெப்போதுஞ் சீத்துப்பூத் தென்னுமே—வெப்போடும்
வாலங்காட் டாநிற்கும் வாயங்கா வாநிற்கு
மாலங்காட் டான்பூ ணரா."

இது சாதித்தன்மை.

"புதுமணத்த காதலனும் பூவையும்புன் வாயி
லெதிருற்று நாண்டமர்கண் டெய்திக்—கதுமென்
றொருவர்க் கொருவர் வழிவிடப்பல் காற்பின்
னிருவரும்போய் மீள்வ ரெதிர்."

இது தொழிற்றன்மை. சூ௩

நிகழ்வினவிற்சியணி.— அஃதாவது, முன்னடந்ததையேனும் பின்னடந்ததையேனு மப்போது நடக்கிறதாகச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பாவிகாலங்கார மென்பர். உ—ம்.—

"பிரிவுணர்ந்த வந்நாளப் பேதைவிழிக் கஞ்சஞ்
சொரிதாளம் யான்றூர நாட்டின்—மருவலுறு
மிப்போதுங் காண்கின்றே னென்செய்கோ விங்கிதற்குத்
தப்போது தோழீ சூழ்ந்து."

இது நடந்தது. சூ௪

வீறுகோளணி.—அஃதாவது, செல்வமிகுதியையேனும் புகழத் தக்கவொருசரித்திரத்தைப் புகழ்பொருளுக் கங்கமாகவேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் உதாத்தாலங்கார மென்பர். உ-ம்.—

"மணிப்பொற் குழைகொண்டு கோழியெறி வாழ்க்கை
யணிப்பொற் கொடிகா ணவள்."

"உமையா ளருந்தவஞ்செய் யொண்கச்சி யூரே
யெமையாள் பரமற் கிடம்." கூடு

மிகுதிநவிற்சியணி.— அஃதாவது, ஆச்சரியப்படத்தக்கதாகவும் பொய்யாகவுமிருக்கின்ற கொடை சௌரியமுதலியவற்றைப்புகழ்தலாம். இதனை வடநூலார் அதியுக்தியலங்கார மென்பர். உ-ம்.—

"ஓதுபுகழ்த் தாதாவாய் நீயுறவிப் போதுலகி
லாதுலர்கள் கற்பகமா னார்."

இது பெருங்கொடை.

"உன்பிரதா பத்தழலின் வற்றுகட லொன்னலர்மா
னன்னவர்கண் ணீரினிறைந் தன்று."

இது சௌரியம். கூசு

பிரிநிலைநவிற்சியணி.—அஃதாவது, பெயர்ச்சொற்களுக்கு உறுப் பாற்றலான் மற்றொருபொருளைத் தந்துரைத்தலாம். இதனை வடநூலார் நிருக்தியலங்கார மென்பர். உ-ம்.—

"நலமரையில ராக்குபழி நண்ணுதலால் வேத
வலரவனென் றுன்னையறை வார்." கூஎ

விலக்கணி.—அஃதாவது, பிரசித்தமானதாகியு மபிப்பிராயத்தோடு கூடியுமிருக்கின்ற விலக்கைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரதிஷேதாலங்கார மென்பர். உ-ம்.—

"சூதாடு வோய்சூத மன்று சொரிகணைகண்
மீதாடு பூசலிது மெய்."

இதில், போரிற் சூதத்தன்மையி னில்லாமை பிரசித்தமாகவுளதாக வும் அன்றென்னும்விலக்கு நீ சூதாட்டத்தன்றிப் போரிற்சமர்த்தனல்லை யென்னுமிகழ்ச்சியை யுட்கொண்டிருக்கின்றது. இது சகுனிக்குச் சொன்னது. சஅ

விதியணி.—அஃதாவது, பிரசித்தமாகியபொருளின் விதியானது ஓரபிப்பிராயத்தோடு கூடிவருதலாம். உ-ம்.—

"குயில்குயிலே யாகுங் குவலயத்திற் சீர்மிக்
குயர்வசந்த கால முறின்."

இதில், குயிலுக்குக்குயிற்றன்மையை விதித்தல்வீணாய் இளவேனில்வரின் மதுரவோசையைச்செய்யுமென்பதை யுட்கொண்டிருக்கின்றது. ௬௬

ஏதுவணி.—அது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

க-வது—காரணத்தைக் காரியத்துடன் சேர்த்துச்சொல்லுதல். உ-ம்.—

"பெருந்திங்க டோன்றுமே பெய்வளையார் நெஞ்சிற்
பொருந்தூட னீர்த்தற் பொருட்டு."

இதில், ஊடனீர்த்தல் காரியம்; தோன்றுதல் காரணம்.

உ-வது காரணத்தையுங் காரியத்தையும் அபேதப்படுத்துச்சொல்லுதலாம், உ-ம்.—

"கூர்கொணெடு வேலுடைநங் கோன்கடைக்கட் பார்வையே
சீர்கொள்கவி வாணர் திரு." ௧00

சொல்லணி யெத்தனைவகைப்படும்?

மடக்குஞ் சித்திரமுமென விருவகைப்படும். இவை பொருளணி போற் பெரும்பயனுடையவன்மையானும் விரிதலானுங் கூறிலம்.

மேற்சொல்லப்பட்டவணிகளுட் செய்யுளகத் திரண்டு முதலியன கூடிவரின் அதனை வேறணியாகக்கொள்ளுதலு முண்டோ?

ஒருவாணியும் பலவணிகளின் கூட்டத்தைப்போலப் பலவணிகள் சேர்ந்து ஒருசெய்யுட்கு மிக்கவழகைச்செய்துநிற்றலால் வேறணியாகவே கொள்ளுதலுண்டு.

அஃ தெத்தனைவகைப்படும்?

சேர்வையணியும், காலவணியும் என விரண்டுவகைப்படும். அவற்றுள்,

சேர்வையணியாவது.—எள்ளு மரிசியுஞ் சேர்ந்தாற்போல விளங்குகின்ற பேதத்தையுடைய பலவணிகளது சேர்க்கையாம். இதனை வடநூலார் சம்சிருஷ்டியலங்கார மென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது—பொருளணிச்சேர்வை. இது பொருளணிகள்பல சேர்ந்து வருதலாம். உ-ம்.—

"காரிரு ளங்கங் களைப்பூசல் போன்றிடுமைம்
மாரியைவா னம்பெய் வதுமானும்—பேருலகிற்
றீயரைச்சேர்ந் தாங்கே சிறிதும் பயன்படா
வாயினவா லந்தோ விழி."

இதில், இரண்டுதற்குறிப்பு மோருவமையுஞ் சேர்ந்துவந்தமை காண்க.

உ-வது—சொல்லணிச்சேர்வை. சொல்லணிகள்பல சேர்ந்துவருதலாம். உ-ம்.—

"கந்தரங் கானந் தனிற்சென் றடங்கிலென் காசிக்கநே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியர் கட்டளக
கந்தரங் கானந்த நின்று டெழிற்செந்தில் கண்டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே."

இது நிரோஷ்டகமும் யமகமுங்கலந்துவந்தது.

ங-வது— சொற்பொருளணிச்சேர்வை. இது சொல்லணியும் பொருளணியுஞ்சேர்ந்து வருதலாம். உ-ம்.—

"ஆன்றார்ந்தகா வினளிபாடுபூந்தேன்மான் றீன்றவேரன்மணியீர்ங்கவுண்மாச் சான்றேங்குகோட்டிற்றயங்குமணிமுத்தோடேன் றார்ந்துநாட்டினடக்க வெழுமார்த்து."

இது, கலிவிருத்தமாகவேனும் வெண்பாவாகவேனும் வாசிக்கப்படுதலாற் பிறிதுபடுபாட்டென்னுஞ் சொல்லணியும், மலையினது பெருஞ்சம்பத்தைச் சொல்லுதலால் வீறுகோளென்னும் பொருளணியுமாம்.

கலவையணியாவது.—பாலு நீருஞ் சேர்ந்தாற்போல விளங்காத பேதத்தையுடைய பலவணிகளது கலப்பாம். இதனை வடநூலார் சங்கராலங்கார மென்பர். அது நான்குவகைப்படும். அவற்றுள்,

க-வது—உறுப்புறுப்பிக்கலவை. இது ஒன்று தலைமைத்தாயு மொழிந்தன தலைமையில்லனவாகியுங் கலந்துவருதலாம். உ-ம்.—

"காற்றினசை தாருநிழல் கண்மதிய மென்னுமரி
யேற்றிற் றுமிப்புண் டிடுகருமை—தோற்றுருவி
னல்லெனுமால் யானை யவயவத்துண் டோவென்று
சொல்லுறவே தோன்றுந் துடித்து."

இதில், மதியமென்னு மரியேறு, அல்லெனு மால்யானை என்னப் பட்ட விரண்டுருவங்களும், அவயவத்துண்டோவென்னுந் தற்குறிப்பிற் குறுப்பாதலால், உறுப்பாகியவுருவகத்திற்கும் உறுப்பியகிய தற்குறிப் பிற்குங் கலப்பாம்.

உ-வது—நிகர்தலைமைக்கலவை. இது, பலவணிகளுந் தலைமை, யுடையனவாய்க் கலந்துவருதலாம். உ-ம்.—

"அங்குலி யாற்சா ரோதிக் கற்றைநீக் குதல்போ லல்லைத்
திங்கடன் கதிரா னீக்கல் செய்துமூ டுறுகண் போலும்
பங்கய மலர்ப டைத்துப் பாருல கதனின் மேய
கங்குன்மான் முகஞ்சு வைக்கின் றனனெனக் கருதத் தோன்றும்."

இதில், உறுப்புகளாகிய விரண்டுவமைகளாலுந் தோன்றுஞ் சந்தி ரனை வினைமுதலாகவுடைய விராத்திரியில் மூகசும்பனத் தற்குறிப்பு, திங்களிலும் இராத்திரியிலுந் தலைவன்றலைவிகளின் செய்கையாரோப மாகிய சுருங்கச்சொல்லலணியை யுட்கொண்டே தோன்றுகின்றது. சுருங்கச்சொல்லலை யுட்கொள்ளாமற்போனாற் சும்பனத்தற்குறிப்பிற்கு வேறோராதாரமில்லாமையா லிரண்டுவமைகளுந் தற்குறிப்பையுஞ் சுருங் கச்சொல்லலையுஞ் சமமாகத்தோன்றச்செய்கின்றன ; ஆதலா லவ்விரண்டு நிகராயின.

ங-வது—ஐயக்கலவை. இது, இதுவோவதுவோவென்றையுறப் பலவணிகள் கலந்துவருதலாம், உ-ம்.—

"அழற்கடுவாய் நாக மடியிலுள தேற்பல்
பழத்தருவா லுண்டோ பயன்."

இதில், பாம்பின்செய்தி வர்ணிக்கப்பட்டுக்கொண்டிருப்ப அரச னரண்மனைவாயிலிலிருக்குங் கொடியோனது செய்தியுந்தோன்றுகின்றது. இங்கே பாம்பின்செய்தி வர்ணியமாகக் கொடியோனது செய்தி யவர்ணிய

மாயிற் சுருங்கச்சொல்லலாம்; அங்ஙனமன்றி வர்ணியமாகிய கொடியோன்செய்தி தோன்றுதற்பொருட்டு அவர்ணியமாகிய பாம்பின்செய்தி சொல்லப்பட்டதென்றாற் புனைவிலிபுகழ்ச்சியாம்; அங்ஙனமன்றி பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற பாம்பின்செய்தியை வர்ணித்தலாற் சமீபத்திருக்குங் கொடியோன்செய்தி வெளிப்படுத்தப்படின் இரண்டும் வர்ணியங்களாதலாற் புனைவுளிவிளைவாம்; என்றிவ்வாறையுற மூன்றணிகள் கலந்துவந்தமை காண்க.

௪—வது—ஒருதொடர்ப்பொருட்கலவை. இது, ஒருபாட்டிற்சொற்களனைத்து மொருபொருளையே சொல்லாநிற்ப வப்பொருளி லிரண்டணிகளி னிலக்கண முண்மையால் அவ்விரண்டுந் தோன்றுதலாம். உ-ம்.—

“சோலை வாயிற் சுடரு நிலாமணி
யால வாலத் தவிர்மதி யாற்புனல்
கால வாய்ந்த கதிர்மணி முல்லையின்
கோல நாண்மலர் கொய்வதற் கெய்தினள்.”

இதனுட்சொல்லப்பட்டபொருள் செல்வமிகுதியைச் சொல்லுதலென்னு மிலக்கணத்தால் வீறுகோளுஞ் சம்பந்தமில்லாதிருப்பச் சம்பந்தத்தைக்கற்பித்தலென்னு மிலக்கணத்தால் உயர்வுநவிற்சியுமாம்.

அணியிலக்கணமுற்றிற்று.

உ

# அணிகளின் பெயர்.

உவமை, பொதுநீங் குவமை, புகழ்பொரு
ளுவமை, யெதிர்நிலை, யுருவகந், திரிபு,
பலபடப் புனைவு, நினைப்பு, மயக்க,
மைய, மொழிப்பு, தற்குறிப் புடனே.
யுயர்வு நவிற்சி, யொப்புமைக் கூட்டம்,
விளக்கு, பின்வரு விளக்கே, தொடர்முழு
துவமை, யெடுத்துக்காட் டுவமை, காட்சி,
வேற்றுமை, யுடனிகழ்ச்சி, யின்மை நவிற்சி,
சுருங்கச்சொல்லல், கருத்துடை யடையே,
கருத்துடை யடைகொளி, பல்பொருட் சொற்றொடர்,
புனைவிலி புகழ்ச்சி, புனைவுளி விளைவே,
பிறிதி னவிற்சி, வஞ்சப் புகழ்ச்சி,
வஞ்சப்பழிப், பெதிர்மறை, முரண்விளைந் தழிவே,
பிறிதா ராய்ச்சி, கா ரணவா ராய்ச்சி,
கூடாமை, தொடர்பின்மை, தகுதி யின்மை,
தகுதி, வியப்பே, பெருமை, சிறுமை,
யொன்றற்கொன் றுதவி, சிறப்பு நிலையே,
மற்றதற் காக்கல், காரண மாலை,
ஒற்றைமணி மாலை, மாலை விளக்கே,
மேன்மே லுயர்ச்சி, நிரனிறை, யுடனே,
முறையிற் படர்ச்சி, மாற்று நிலையே,
யொழித்துக் காட்ட, லுறழ்ச்சி, கூட்டம்,
வினைமுதல் விளக்கே, யெளிதின் முடிபே,
விறல்கோ, டொடர்நிலைச் செயுட்பொருட் பேறே,
தொடர்நிலைச் செயுட்குறி, வேற்றுப்பொருள் வைப்பே,
மலர்ச்சி, கற்றோர் நவிற்சி, யுய்த் துணர்வே,
பொய்த்தற் குறிப்பே, வனப்பு நிலையே,
யின்பந், துன்ப, மக மலர்ச்சி, யிகழ்ச்சி,
வேண்ட, விலேசங், குறிநிலை, யாதந
மாலை, பிறிதின் குணம்பெற லுடனே,
தொலைவுறப் பெறல், பிறிதின் தணம் பெருமை,
தன்குண மிகை, மறை, பொதுமை, மறையாமை,
சிறப, பிழை, நுட்பங், கரவுவெளிப் படுப்பே,
வஞ்ச நவிற்சி, குறிப்பு நவிற்சி,
வெளிப்படை நவிற்சி, யுத்தியே, யுலக
வழக்கு நவிற்சி, வல்லோர் நவிற்சி,
மடங்குத னவிற்சி, தன்மை நவிற்சி,
நிகழ்வி னவிற்சி, வீறுகோள், மிகுதி
நவிற்சி, பிரிநிலை நவிற்சி, விலக்கே,
விதியே, யெது வெனரு றணியே.

[இச்சூத்திரம் இராமநாதபுரம் ஸம்ஸ்தான வித்வானாகவிருந்த பிரம்ஹஸ்ரீ சதாவதானம் முத்துஸாமி ஐயங்காரவர்கள் சூத்திரமுறையுமாக வியற்றிய சந்திராலோகத்திலுள்ளது.]

# அணியகராதி.


| அணி | பக்கம். | அணி | பக்கம். |
|---|---|---|---|
| அகமலர்ச்சியணி | ௪௰ | சிறப்புநிலையணி | ௩௧ |
| அரதனமாலையணி | ௪௨ | சிறுமையணி | ௩௰ |
| இகழ்ச்சியணி | ௪௧ | சுருங்கச்சொல்லலணி | ௰அ |
| இயைபின்மையணி | ௨ | தகுதியணி | ௨௧ |
| இலேசவணி | ௪௧ | தகுதியின்மையணி | ௨அ |
| இறையணி | ௪௪ | தற்குறிப்பணி | அ |
| இன்பவணி | ௩௯ | தன்குணமிகையணி | ௪௩ |
| இன்மைநவிற்சியணி | ௰அ | தன்மைநவிற்சியணி | ௪௭ |
| உடனிகழ்ச்சியணி | ௰௭ | திரிபணி | ௫ |
| உயர்வுநவிற்சியணி | ௰ | துன்பவணி | ௩௯ |
| உய்த்துணர்வணி | ௩அ | தொடர்நிலைச்செய்யுட்குறியணி | ௩௯ |
| உருவகவணி | ௪ | தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி | ௩௯ |
| உலகவழக்குநவிற்சியணி | ௪௯ | தொடர்பின்மையணி | ௨௭ |
| உவமையணி | ௩ | தொடர்முழுதுவமையணி | ௰௫ |
| உறழ்ச்சியணி | ௩௪ | தொல்லுருப்பெறலணி | ௪௨ |
| எடுத்துக்காட்டுவமையணி | ௨௫ | நிகழ்வினவிற்சியணி | ௪௭ |
| எதிர்நிலையணி | ௩ | நிரனிறையணி | ௩௩ |
| எதிர்மறையணி | ௨௪ | நினைப்பணி | ௯ |
| எதிர்நின்முடிபணி | ௰௫ | நுட்பவணி | ௪௪ |
| ஏதுவணி | ௪௧ | பலபடப்புனைவணி | ௫ |
| ஐயவணி | ௭ | பல்பொருட்சொற்றொடரணி | ௨௰ |
| ஒப்புமைக்கூட்டவணி | ௰௩ | பிரிநிலைநவிற்சியணி | ௪அ |
| ஒழித்துக்காட்டணி | ௩௪ | பிறிதாராய்ச்சியணி | ௨௫ |
| ஒழிப்பணி | ௭ | பிறிதின்குணம்பெறலணி | ௪௨ |
| ஒற்றைமணிமாலையணி | ௩௨ | பிறிதின்குணம்பெறாமையணி | ௪௩ |
| ஒன்றற்கொன்றுதவியணி | ௩௰ | பிறிதினவிற்சியணி | ௨௨ |
| கரவுவெளிப்படுப்பணி | ௪௫ | பின்வருவிளக்கணி | ௰௪ |
| கருத்துடையடையணி | ௰௯ | புகழ்பொருளுவமையணி | ௨ |
| கருத்துடையடைகொளியணி | ௰௯ | புனைவிலிபுகழ்ச்சியணி | ௨௰ |
| க[illegible]ர்நவிற்சியணி | ௩அ | புனைவுளிவிளைவணி | ௨௨ |
| காட்சியணி | ௰௯ | பெருமையணி | ௩௰ |
| காரணமாலையணி | ௩௨ | பொதுமையணி | ௪௩ |
| காரணவாராய்ச்சியணி | ௨௭ | பொய்த்தற்குறிப்பணி | ௩அ |
| குறிநிலையணி | ௪௨ | மடக்குதனவிற்சியணி | ௪௭ |
| குறிப்புநவிற்சியணி | ௪௯ | மயக்கவணி | ௯ |
| கூடாமையணி | ௨௭ | மலர்ச்சியணி | ௩௭ |
| கூட்டவணி | ௩௪ | மறையாமையணி | ௪௩ |
| சிறப்பணி | ௪௪ | | |

| அணி | பக்கம். | அணி | பக்கம். |
|---|---|---|---|
| மறைவணி | ௪௩ | வனப்புநிலையணி | ௩௯ |
| மற்றதற்காக்கலணி | ௩௧ | விதியணி | ௪௯ |
| மாலைவிளக்கணி | ௩௩ | வியப்பணி | ௩௰ |
| மாற்றுநிலையணி | ௩௪ | விலக்கணி | ௪௮ |
| மிகுதிநவிற்சியணி | ௪௮ | விளக்கணி | ௰௪ |
| முரண்விளைந்தழிவணி | ௨௫ | விறல்கோளணி | ௩௫ |
| முறையிற்படர்ச்சியணி | ௩௩ | வினைமுதல்விளக்கணி | ௩௫ |
| மேன்மேலுயர்ச்சியணி | ௩௩ | வீறுகோளணி | ௪௮ |
| யுத்தியணி | ௪௬ | வெளிப்படைநவிற்சியணி | ௪௬ |
| வஞ்சநவிற்சியணி | ௪௫ | வேண்டலணி | ௪௧ |
| வஞ்சப்பழிப்பணி | ௨௪ | வேற்றுப்பொருள்வைப்பணி | ௩௭ |
| வஞ்சப்புகழ்ச்சியணி | ௨௩ | வேற்றுமையணி | ௰௭ |
| வல்லோர்நவிற்சியணி | ௪௬ | | |

# அணியும் உதாரணமுதற்குறிப்பும்.

| அணி. | உதாரணமுதற்குறிப்பு. |
| --- | --- |
| க. உவமையணி | |
| விரிபுவமை | பால்போலுமின் |
| தொகையுவமை (எ) | புயற்கருங் |
| உ. இயைபின்மையணி | தேனேயனைய |
| ந. புகழ்பொருளுவமை | நின்புடையறநிகர்த்<br>களிக்குங்கயல் |
| ச. எதிர்நிலையணி (ரு) | (க) அதிர்கடல் |
| | (உ) பொன்செருக் |
| | (ந) ஆற்றலுறு |
| | (ச) இறைவிமதுர |
| | (ரு) செங்கயற்கணுயுன் |
| ரு. உருவகவணி (சு) | |
| மிகைபொற்றுமை | உயர்புகழ்நங் |
| குறைபொற்றுமை | எல்லாருமேத்து |
| அவையிலொற்றுமை | பவக்கடல்கடந்து |
| மிகையதன்செய்கை | மங்கைவதன |
| குறையதன்செய்கை | பொருதிரைசேர் |
| அவையிலதன்செய்கை | இம்மான்முக |
| சு. திரிபணி | செய்யவடிக் |
| எ. பலபடப்புனைவணி (உ) | (க) ஆரணங்காணென்ப |
| | (உ) செல்வமதிற்<br>தருமன்றண் |
| அ. நினைப்பணி | காதலுறுகஞ்ச |
| கூ. மயக்கவணி | மழைக்கண்மங்கை |
| க0. ஐயவணி | தாதளவிவண்டு |
| கக. ஒழிப்பணி (சு) | |
| வெற்றொழிப்பு | மதியன்றிது |
| காரணவொழிப்பு | பொங்குவெம்மை |
| வேறுபாட்டொழிப்பு | தெரிபுமிதுதிங்க |
| மயக்கவொழிப்பு | மனக்கினியதோழி |
| வல்லோவொழிப்பு | இலங்கயிற்கணளிகுலைக் |
| வஞ்சகவொழிப்பு | இம்மடந்தைகட் |
| கஉ. தற்குறிப்பணி (சு) | |
| விரிபுலப்பொருள் | நேயப்பெடைத் |
| தொகுபுலப்பொருள் | காரிருளங்கப்<br>மைம்மாரியை |

| அணி. | உதாரணமுதற்குறிப்பு. |
| --- | --- |
| உளபுலவேது | ஏந்திழைநின் |
| இல்புலவேது | முகவொளியைப் |
| உளபுலப்பயன் | குயிற்றிரளையோட் |
| இல்புலப்பயன் | ஒண்டொடிகேளுன் |
| கங, உயர்வுநவிர்ச்சியணி (எ) | |
| உருவகவுயர்வுநவிற்சி | புயலேசுமந்து |
| ஒழிப்புயர்வுநவிற்சி | பைந்தொடிநின் |
| பிரிநிலையுயர்வுநவிற்சி | பாந்தண்முடியிற் } போதார்மலர்க்கூந் } |
| தொடர்புயர்வுநவிற்சி | அகழுமிஞ்சியு } அற்பகத்தின் } |
| முறையிலுயர்வுநவிற்சி | மன்னநின்கணையு } விரிந்தமதிநிலவின் } |
| விரைவுயர்வுநவிற்சி | அருளாக்குநல்லற |
| மிகையுயர்வுநவிற்சி | வணங்கியிறை |
| கச. ஒப்புமைக்கூட்டவணி (ச) | |
| புனைவுளி | மாமதிதோன்றக் |
| புனைவிலி | தீதில்கழைச்சாறுந் |
| | (ங) வீரமிகு மன்ன } விரும்பிவளர்ப் } |
| | (ச) ஈகுநர்கள் |
| கரு. விளக்கணி | ஆதபத்தாற் சூரி |
| கசு. பின்வருவிளக்கணி (ங) | |
| சொல் | மாரனழுங்கம் |
| பொருள் | அவிழ்ந்தனதோன்றி |
| சொற்பொருள் | மகிழ்ந்த நெடுஞ் |
| கஎ. தொடர்முழுதுவமையணி (உ) | |
| நிரல்தொடர் | தாபத்தி னல்விளங் |
| முரண்டொடர் | கற்றோ னருமைகற் |
| கஅ. எடுத்துக்காட்டுவமையணி (உ) | |
| நிகரெடுத்துக்காட் | அண்ணனீயே } அகரமுதலவெ } |
| முரணெடுத்துக்காட் | மன்னவநின் |
| ககூ. காட்சியணி (ங) | |
| வாக்கியப்பொருள் | முறைகெழுவள் |
| பதப்பொருள் | குவளைமலரழகைக் } மருத்தகுகோதாய் } |
| பொருள் { நற்பொருள் | ஆதவனற் செல்வங் |
| பொருள் { தீப்பொருள் | அர்பனுயர்வா } வெண்மதிதோன் } |
| உ௰. வேற்றுமையணி | மலிதோரான்கச் } நறைமலர்த்தார்க் } |

93

| அணி. | உதாரணமுதற்குறிப்பு. |
|---|---|
| ௨௧. உடனிகழ்ச்சியணி | இகந்தபகைவ |
| ௨௨. இன்மைநவிற்சியணி | மறங்கொள்கொடி<br>புகழ்க்குரியன் |
| ௨௩. சுருங்கச்சொல்லணி | இந்தக்கன்னிமதி<br>கொந்தார்குழல் |
| ௨௪. கருத்துடையடையணி | திங்கண்முடிசேர்<br>நெடுங்கோலச்<br>வாளான்மகவரிந் |
| ௨௫. கருத்துடையடைகொளியணி | மூக்கணனேயன்பு<br>சீர்த்தநின்புகழ் |
| ௨௬. பல்பொருட்சொற்றொடரணி (௩) | |
| புனைவுளி | மணிமுடிமேற் |
| புனைவிலி | தெருட்டுங்கலை |
| இருமை | ஏர்க்கதிர்வாள் |
| ௨௭. புனைவிலிபுகழ்ச்சியணி (௫) | |
| ஒப்புமை | மேதகுசீர்க்காரை |
| பொது | மைந்தகேள்கல்வி |
| சிறப்பு | மன்னுமிருகமதைத் |
| காரணம் | ஒழுகொளிவிரிந்த |
| காரியம் | மருக்கமழ்பூங் |
| ௨௮. புனைவுளிவிளைவணி | அம்புயநற்போ |
| ௨௯. பிறிதினவிற்சியணி (௨) | (௧) இராகும்மனைவி<br>(௨) மின்னிகராமாதே |
| ௩௰. வஞ்சப்புகழ்ச்சியணி (௩) | (௧) பேசுகொலையாதிப் அன்றிலங்கை<br>(௨) எற்காகத்தூதா இரவறியா<br>(௩) சீரார்ந்திலகு |
| ௩௧. வஞ்சப்பழிப்பணி | நீயுந்தவறிலை |
| ௩௨. எதிர்மறையணி (௩) | (௧) ஒண்கதிர்த்திங்<br>(௨) தண்ணறுவுண்<br>(௩) விளைபொருண்மே |
| ௩௩. முரண்விளைந்தழிவணி | சந்தமிலவா |
| ௩௪. பிறிதாராய்ச்சியணி (௬) | (௧) கடையாமேகூர்<br>(௨) திண்மையுங்கூர்<br>(௩) அடுத்தநின்பிர<br>(௪) வழுவாதமானிவள்<br>(௫) சீர்தருசோமன்<br>(௬) மற்பெறுவள் |
| ௩௫. காரணவாராய்ச்சியணி | இறைமதனுந்தீப |
| ௩௬. கூடாமையணி | அடுக்கலையோர் |

224683
224683